விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம் - I,II

உள்ளே...

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 02 வியாழக்கிழமை (17.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

## குற்றச்சாட்டுக்கள் குறித்து

# இலங்கையிடம் பதில் இல்லை!

## ஐ.நா. நிபுணர்குழு சாடல்

(ஜெனிவா)

இலங்கை படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்கடத்தல்கள், இரகசிய தடுப்பு முகாம்கள், சித்திரவதைகள், தடுப்புக்காவல் மரணங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் நிபுணர்கள் கடுமையான கேள்விகளை எழுப்பினர். (23ஆம் பக்கம் பார்க்க)

## 27 பவுண் நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கு தென்மூலை பகுதியில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் 14 இலட்சம் ரூபாய பெறுமதியான 27 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுள்ளனா.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## நல்லாட்சி போறுப்பல்ல!

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் முன்னாள் ஜனாதிபதி மகி

23ஆம் பக்கம் பார்க்க....

## எலிக்காய்ச்சல் காரணமாக கிளிநொச்சியில் ஒருவர் பலி

### விழிப்பாக இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரிக்கை

(பரந்தன்)

கிளிநொச்சியில் எலிக்காய்ச்சல் காரணமாக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியிட்டுள்ள மாவட்ட சுகாதாரத்துறையினர், எலிக்காய்ச்சல் தொடர்பில் மக்களை அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் எச்சரித்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி அன்று வயல் விதைப்பில் ஈடுபட்ட பின்னர் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கிளிநொச்சி மருதநகரை சேர்ந்த 57 வயதுடைய குடும்பஸ்தரே எலிக் காய்ச்சல் காரணமாக

23ஆம் பக்கம் பார்க்க....

## வாள்வெட்டு

## தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் காயம்

## அநாதரவாக வெட்டுண்டு கிடந்த நபரொருவர் பொலிஸாரால் மீட்பு

## விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள கட்டியெழுப்ப முயன்றனர்!

## வாள்வெட்டு
# தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் காயம்

(பரந்தன்)

கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடாப் பகுதி கடையொன்றில் நேற்று மாலை ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக இரண்டு குழுக்கள் மோதுண்டதில் தமிழ் இளைஞர் ஒருவரும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் முழங்

24ஆம் பக்கம் பார்க்க....

# அநாதரவாக வெட்டுண்டு கிடந்த நபரொருவர் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

உடலில் பல வெட்டுக்காயங்களுக்கு இழக்காகி மயங்கிய நிலையில் உயிருக்கு போராடியபடி அநாதரவாக காணப்பட்ட நபரொருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டு சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவமானது நேற்று இரவு சுமார் 7 மணியளவில் கல்லுண்டாய் வை.எம்.சி வீதியில் இடம்பெற்றுள்ளதுடன் குறித்த நபருக்கு சுமார் 45 வயது இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் பிரஸ்தாப நபர் தொடர்பான மேலதிக தகவல்கள் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்திருந்

23ஆம் பக்கம் பார்க்க....

# விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள கட்டியெழுப்ப முயன்றனர்!
## கைதான நபர்கள் மீது ரி.ஐ.டி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக அண்மையில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள், தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை மீள கட்டியெழுப்பும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நேற்றைய தினம் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 11 பேரும் நேற்றைய தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் 2ஆவது தடவையாக ஆஜர் படுத்தப்பட்டதுடன் அவர்களு

24ஆம் பக்கம் பார்க்க....

# 70 கிலோ கஞ்சா வவுனியாவில் மீட்பு



09ஆம் பக்கம் பார்க்க....

# 10 கிலோ கஞ்சாவுடன் நபர் கைது; 75 இலட்சம் ரூபாய் பணமும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து யாழிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட கேரள கஞ்சாவினை வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்துள்ள இளவாலை பொலிஸார் அவரிடமிருந்து சுமார் 75இலட்சம் ரூபாய் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்றைய தினம் மாலை யாழ் மாதகல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந் நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக கடத்திவரப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதியொன்று யாழ்ப்பாணம

24ஆம் பக்கம் பார்க்க....

# ஆட்சி மாறலாம் நட்பு மாறக்கூடாது!

(கொழும்பு)

ஆட்சி மாற்றங்கள் இரு நாட்டு உறவுகளை பாதிப்பதாக அமைந்து விடக்கூடாது, இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் சீனா வெளிப்படையானதும் தனித்துவமானதுமான ஒத்துழைப்புக்களையே என்றும் வழங்கும் என இலங்கைக்கான

23ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் காணிக்குள் விகாரை
# சுமணரத்ன தேரரால் நேற்று மீளவும் பதற்றம்!



(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மங்களாராமய விஹாராதிபதி அம்பிட்டிய சுமண

24ஆம் பக்கம் பார்க்க....

# மாவீரர்களை நினைவுகூர அனுமதியுங்கள்!
## நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி கோரிக்கை

### “அனுமதித்தால் பாரிய மாற்றத்தை நல்லிணக்கத்தில் காண முடியும்”

(கொழும்பு)


எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை தமிழ மக்கள் விளக்கேற்றி நினைவுகூர அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் பலர் தமது குடும்பத்தினரால் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை. இவர்கள் உயிருடன் மீண்டும் வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் காணாமல் போனவர்களின் பெற்றோர், மனைவிமார்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 43 முதிரை மரக்குற்றிகளுடன் லொறிவாகனம், சாரதி கைது



(மல்லாவி)

சட்ட விரோதமாக வெட்டப்பட்டு லொறி வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன் லொறி வாகனத்தை கைப்பற்றியதுடன் பொலிஸார் அதன் சாரதியினையும் கைது செய்துள்ளனர்

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணியங்குளம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு லொறி வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் நேற்று அதிகாலை மீட்டதுடன் அதனைச் செலுத்திச் சென்ற சாரதியினையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சாரதியிடம் விசாரணைகளை மேற்கொண்டு வரும் கிளிநொச்சிப் பொலிசார் சான்றுப் பொருட்களையும் சாரதியையும் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (செ-15)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்றைய தினம் (17) பாடசாலை மண்டபத்தில், பாடசாலை அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட கல்வி பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்வுடன் இடம்பெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (செ-9)

## 13 அரசியல் கைதிகளுக்கு தொடர் விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் 13 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப் பித்துள்ளது.

இதன்படி பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 13 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் 13 பேர் கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டிருந்த வேளையில், அவர்களை இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

அரசியல் கைதிகள் சார்பில் சட்டத்தரணிகள் டி.எஸ்.நிரஞ்சன் மற்றும் டியூக் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (செ-9)

## திருத்தம்

நேற்றையதினம் வலம்புரியில் வெளிவந்த கலைத் தரிசனத்தில் ஈழத்தின் தலை சிறந்த பாடகர் G.சாந்தன் பாடிய புரட்சிப்பாடல் **இந்தமண் எங்களின் சொந்தமண** என்பதாகும்.

அச்சில் ஏற்பட்ட தவறை திருத்தி வாசிக்கவும். (ஆ - ர்)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532




சிறுபான்மை இன அரச அலுவலர்களையும் சிறுபான்மை சமூகங்களையும் இழிவுபடுத்தும் வகையில் நடந்து கொண்ட, மட்டக்களப்பு மங்களராமய விஹாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கெதிராக, மட்டக்களப்பு மாவட்ட கிராம அலுவலகர்கள் இணைந்து கறுப்புப் பட்டியணிந்து எதிர்ப்புப் போராட்டத்தில நேற்று புதன்கிழமை ஈடுபட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றும் சுமார் 350 இற்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் இந்த கறுப்புப் பட்டி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தனர். (5)

**பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு**
**யா/செங்குந்த இந்துக்கல்லூரி**

மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வானது 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறும். பாடசாலையின் எதிர்கால திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாட வேண்டியுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களும் கலந்துகொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
077 339 7209
(6628)

**கல்விமாணி பட்டக்கற்கை 2011 / 2013**
**கிளிநொச்சி கற்கை நிலையம்**
**கலந்துரையாடல்**

மேற்படி கற்கை நிலையத்தில் கல்வி பயின்ற ஆசிரியர்களே, எமது கற்கை நெறி நிறைவையிட்டு வெளியிடும் "அறிகை" எனும் மலரில் தங்களது பெயர் விபரம், புகைப்படம் என்பன சரியாக இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் நன்றி நவிலல் விழா ஒழுங்கமைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 19.11.2016 மதியம் 12 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு :- ஏற்பாட்டுக் குழு
0777 893 799 / 077 673 7535
(C-6417)

**ஓராண்டு நினைவலைகள்**



**அமரர் கணபதிப்பிள்ளை சபாநாயகம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ்.இந்துக்கல்லூரி)

அன்னை மடியில் :- 12.12.1950
ஆண்டவன் அடியில் :- 28.11.2015
திதி :- திருதியை

கற்பனையில் மிதந்தபடி
கனவுகள் கலைந்தபடி
கண்ணீரில் நனைந்தபடி
நினைத்துப் பார்க்கின்றோம் - நீங்கள்
இல்லையா என்று நம்பமுடியவில்லையே
நம் கண்கள் முன்னால் - நீங்கள்
நிதமும் நடமாடுகின்றீர்களே
மறக்க முடியுமா என்றும் உங்கள்
மகிழ்வுடன் தான் இருக்க
முடியுமா எங்களால்
ஆறாத் துயருடன் ஆண்டொன்று
போய்விட்டது. ஓராண்டென்ன
ஒரு யுகம் சென்றாலும்
மறவோம் உங்களை

என்றும் உங்கள் நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும்...

நாகேஸ்வரி இல்லம்
உரும்பிராய் கிழக்கு, கரந்தன்,
நீர்வேலி
- குடும்பத்தினர்
(6629)



**ஓராண்டு நினைவலைகள்**

**அமரர் மருதபிள்ளை திருக்குமாரி (திரு)**

**திதி :- திருதியை**

ஆண்டொன்று கழிந்தது சகோதரி
இன்று ஆனாலும் உங்கள்
நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை
மீண்டும் அன்புடன் காண்பதற்கு
தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்.
(6632)

தோற்றம் :- 02.08.1978
மறைவு :- 28.11.2015

இல.303, ஆடியபாதம் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்
தொலைபேசி :- 0775126699

# அகதிகள் படகு கவிழ்ந்து 100 பேர் பலி!

(திரிபோலி)

**லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு பயணித்துக் கொண்டிருந்த அகதிகள் படகு கடலில் திடீரென மூழ்கியதில் 100 பேர் பலியாகினர்.**

லிபியாவில் இருந்து ஒரு அகதிகள் படகு ஐரோப்பிய நாடுகளுக்கு புறப்பட்டு சென்றது. அதில் 122 பேர் இருந்தனர். அவர்களில் 10 பேர் பெண்கள். இந்த படகு மத்திய தரைக்கடலில் சென்று கொண்டிருந்த போது திடீரென தண்ணீரில் மூழ்கியது. எனவே, படகில் பயணம் செய்தவர்கள் நீரில் தத்தளித்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஜேர்மனியின் சென்னை கப்பல் அங்கு விரைந்து சென்று 22 பேரை மட்டுமே காப்பாற்றியது. (இ-10)

## கைக்குண்டு, கைத்துப்பாக்கி வைத்திருந்த மூவர் கைது!



மாத்தறை பகுதியில் கைக்குண்டு வைத்திருந்த 3 நபர்களை பொலிஸார். நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து கைக்குண்டு, கைத்துப்பாக்கி மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரிடமும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (இ-7-10)

## குறுகிய அரசியல் தேவைகளுக்காக சுதந்திரத்தை பயன்படுத்தக்கூடாது

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தை குறுகிய அரசியல் தேவைகளுக்காகவோ இனவாத அல்லது மதவாத அடிப்படையிலோ பயன்படுத்துவது நாட்டின் எதிர்கால பயணத்துக்கு தடையாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் 47வது ஆண்டுநிறைவு நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய அரசாங்கம் அரச கொள்கைகளுக்கமைய சகல துறைகளிலுமான பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகிறது என்று கூறிய ஜனாதிபதி நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியுள்ள அரசு, படிப்படியாக முன்னோக்கி பயணிப்பதாகவும் ஒருசிலர் எதிர்பார்ப்பது போல் உடனடியாக தீர்வு காணமுடியாத போதிலும் முறையான திட்டங்கள் மூலம் நாட்டினதும் மக்களினதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பாடுபடுவதாகவும் தெரிவித்தார்.

சுதந்திர சுகாதார சேவையை மேலும் பலப்படுத்துவதுடன் அத்துறையிலுள்ள அனைவரினதும் தொழில் சிறப்புரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## வங்கியில் நிதி மோசடி ஐவர் கைது

கட்டுநாயக்க - எவரியவத்தை பகுதியில் வங்கிக் கணக்கில் நிதி மோசடி செய்த பெண்கள் இருவர் உள்ளிட்ட ஐவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு விசேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் போலி அடையாள அட்டை மற்றும் ஆவணங்களை தயாரித்து. வங்கிக் கணக்கிலுள்ள நிதியை மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.


மேலும் இவர்கள் பதுளை, மோதரை, தெஹிவளை, நுவரெலியா மற்றும் கந்தானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் கைது செய்யப்பட்டவர்களை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

## ரூ.2ஆயிரத்து 500 தண்டப்பணம் சிறிய வீதிச் சட்டங்களை மீறுவதற்கல்ல - ரவி

வரவு-செலவுத் திட்டத்தில் 2500 ரூபாய் தண்டப்பண யோசனை முன்வைக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தும் குற்றச்சாட்டுக்களுக்கே தவிர, குறைந்தபட்ச வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்காக அல்லவென நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நண்பகல் நடைபெற்ற, வரவு -செலவுத் திட்ட செயலமர்வொன்றில், கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

## இலங்கையில் பொறுப்புக்கூறலை பலப்படுத்த 14 மில்.டொலர்களை ஒதுக்கவுள்ள யு.எஸ்.எயிட்



யு.எஸ்.எயிட் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படவுள்ள ஜனநாயக ஆட்சி முறைமை மற்றும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான 3 வருட செயற்றிட்டம் தொடர்பான சந்திப்பொன்று அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

3 வருடங்களை உள்ளடக்கிய இத்திட்டத்தின் மூலம் அரச சேவையின் பொறுப்புக்கூறலை பலப்படுத்துவதுடன் ஜனநாயக நிர்வாகத் திட்டமொன்றை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கான பொறுப்புக்கூறலை அதிகப்படுத்துதல், மூலோபாய திட்டமிடல் மற்றும் தொடர்பாடல், கொள்கை சீர்திருத்தல் மற்றும் அதன் நடைமுறையை அதிகப்படுத்துதல், இத்திட்டத்தினுள் பெண்கள் மற்றும் பிரதிநிதித்துவமற்ற ஏனையவர்களின் அரசியல் பங்களிப்புக்களை அதிகரித்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்காக 14 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்குவதற்கு எதிர்பார்த்துள்ள யு.எஸ்.எயிட் குறித்த நிதியை அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, வெகுசன ஊடக மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, சுயாதீன ஆணைக் குழு என்பவற்றுக்கு மேற்குறித்தவற்றை செயற்படுத்துவதற்காக வழங்கத்தீர்மானித்துள்ளது.

இச்சந்திப்பில் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு தேவைப்படும் உதவிகள் தொடர்பாக அமைச்சர் மத்தும பண்டாரவினால் விளக்கப்பட்டதோடு, அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக யு.எஸ். எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான உதவி இயக்குனர் எலீனா டென்சே அமைச்சரிடம் தெரிவித்தார். (இ-7-10)

## வரவு - செலவுத்திட்டம் குறித்து கண்காணிக்கக் குழு நியமனம்

வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் உரிய முறையில் நடைபெறுகின்றதா? என்பதைக் கண்காணிக்கும் வகையில் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர் மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போது நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் ஏராளமாக முன்வைக்கப்படுகின்றது. ஆனால் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இதனைக்கருத்திற்கொண்டு, இம்முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தின் முன்மொழிவுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பதை அவதானிப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழுவில் பத்து முதல் பன்னிரண்டு வரையானோர் இடம்பெற்றிருப்பார்கள்.

இவர்கள் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி என்பன உரிய முறையில் செலவிடப்படுகின்றதா? என்பதைக் கண்காணித்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது இது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறும் என்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை 18 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அநுர சேனநாயக்க, சுமித் பெரேராவின் மறியல் நீடிப்பு!

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க, நாரஹேன்பிட்டிய பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களை இம் மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ், நேற்று உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)

## அமைச்சர் ரங்கே பண்டார நேற்று பிணையில் விடுவிப்பு

வாகன மோசடி குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அமைச்சர் ரங்கே பண்டார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உதிரிப்பாகங்கள் கொண்டு பொருத்தப்பட்ட ஆடம்பர வாகனமொன்றுக்கு மொன்டெரோ வாகனமொன்றின் பதிவு இலக்கத்தைப் பயன்படுத்த ஒத்தாசை புரிந்துள்ளதாக அமைச்சர் ரங்கே பண்டார மீது பொலிஸார் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அமைச்சருடன் சேர்த்து நளின்த ஜகத் என்று இன்னொரு நபரும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இவர்கள் இருவரும் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

இவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா ரொக்கம் மற்றும் இரண்டு பதினெட்டு இலட்சம் ரூபாவுக்கான சரீரப் பிணைகள் இரண்டையும் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணை எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## வட, கிழக்கில் முதலீடு செய்ய சீன அரச நிறுவனம் இணக்கம்



யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கும், பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கும் பாரிய முதலீடுகளை மேற்கொள்ள சீன அரச நிறுவனமான சீஎஸ். ஆர். இணக்கம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான எம்.எல். ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கும் சீ.எஸ்.ஆர். நிறுவனத்தின் பிரதித்தலைவர் தலைமையிலான பணிப்பாளர் சபை குழுவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று நேற்று இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இலங்கையின் அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயம் மற்றும் மின்சார துறைகளை முன்னேற்றுவதற்காக பாரிய முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். (இ-7-10)

# ஆரம்பமாகிறது விசாகப்பட்டின டெஸ்ட்

## வீசுமா இந்திய 'சுழல் சூறாவளி'

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டணத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ராஜ்கோட்டில் நடந்த முதல் டெஸ்ட் வெற்றி-தோல்வியின்றி சமனிலையில் முடிவுற்றது.

இந்நிலையில் இத்தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டணத்தில் இன்று ஆரம்பமாகிறது.

முதல் டெஸ்டில் இந்திய அணி தோல்வியில் இருந்து தப்பி போட்டியை சமன் செய்தது. அணித்



தலைவர் விராட் ஹோலி அபாரமாக விளையாடி அணியை காப்பாற்றினார். ராஜ்கோட் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏற்ற வகையில் இருந்தது.

ஆனால் விசாகப்பட்டனம் மைதானம் 2ஆவது நாளில் இருந்தே சுழல்பந்து வீச்சுக்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியா ஆதிக்கம் செலுத்தி வெற்றி பெற முயற்சிக்கும்.

நியூசிலாந்துக்கு எதிரான கான்பூர் டெஸ்டில் காயம் அடைந்த ராகுல் உடல் தகுதி பெற்றதால் அணிக்கு திரும்பியுள்ளார். ராஞ்சி போட்டியில் சிறப்பாக ஆடிய அவர் முரளி விஜய்யுடன் இணைந்து தொடக்க வீரராக ஆடுவார் என்று தெரிகிறது. கம்பீர் ராஜ்கோட் டெஸ்டில் சொதப்பியதால் அவர் நீக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

துடுப்பாட்டத்தில் முரளி விஜய், புஜாரா, அணித் தலைவர் ஹோலி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். இதில் புஜாராவும், முரளி விஜயும் சதம் அடித்து இருந்தனர். ரஹானேயின் துடுப் பாட்டம் முதல் டெஸ்டில் எடுபட வில்லை. இதனால் தனது திற மையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

முதல் டெஸ்டில் 5 பந்து வீச்சாளர்களுடன் இந்திய அணி களம் இறங்கியது. விசாகப்பட்டினத்திலும் இதேநிலை நீடிக்குமா? என்று தெரியவில்லை. அமித் மிஸ்ரா எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாததால் அவருடைய இடத்தில் பாண்ட்யா அல்லது கருண் நாயர் இடம்பெறலாம்.

வசாகப்பட்டினம் ஆடுகளம் சுழல பந்துக்கு உகந்ததாக இருக்கும் பட்சத்தில் அமித் மிஸ்ரா நீடிப்பார்.

அணியின் முன்னணி சுழல் பந்து வீரர் அஸ்வின் ராஜ்கோட் டெஸ்டில் நேர்த்தியாக பந்துவீச வில்லை. ஆனால் துடுப்பாட்டத்தில் முத்திரை பதித்தார். அஸ்வினும், ஜடேஜாவும் இந்த டெஸ்டில் இங்கிலாந்துக்கு நெருக்கடி கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணியை பொறுத்தவரை முதல் டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தியது. எனினும் வெற்றி பெற முடியாமல் போனது அந்த அணிக்கு ஏமாற்றத்தை அளித்தது. ராஜ்கோட் போட்டியில் அணித் தலைவர் குக், ஜோ ரூட், மொய்ன் அலி, பென் ஸ்ரோக்ஸ் ஆகிய 4 வீரர்கள் சதம் அடித்து இருந்தனர். பந்துவீச்சில் அடில் ரஷிட், ஸ்ரூவேர்ட் பிரோட், வோக்ஸ் நல்ல நிலையில் உள்ளனர்.

துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சமபலத்துடன் இருக்கும் இங்கிலாந்து அணி இந்த டெஸ்டிலும் ஆதிக்கம் செலுத்த கடுமையாக போராடும். இரு அணிகளும் சிறப்பாக ஆடுவார்கள் என்பதால் இன்றைய டெஸ்ட் பரபரப்பாக இருக்கும்.

இரு அணிகளும் இன்று மோதுவது 114ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதுவரை நடந்த 113 போட்டிகளில் இந்தியா 21 டெஸ்ட்களிலும் இங்கிலாந்து 43 டெஸ்ட்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 49 போட்டி சமனிலையானது.

காலை 9.30 மணிக்கு தொடங்கும் இந்த டெஸ்ட் ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

*அணி விபரம்:* **இந்தியா:** விராட ஹோலி (அணித் தலைவர்), முரளி விஜய், ராகுல், புஜாரா, ரஹானே, விர்த்திமான் சகா, அஸ்வின், ஜடேஜா, அமித் மிஸ்ரா, மொஹமட் சமி, உமேஷ் யாதவ், கம்பீர். இஷாந்த் சர்மா, பாண்ட்யா, கருண் நாயர். ஜெயந்த் ஜாதவ்.

**இங்கிலாந்து:** குக் (அணித் தலைவர்), ஹசீப் ஹமீட், ஜோ ரூட், மொய்ன் அலி, பென் ஸ்ரோக்ஸ், டக்கெட், பேர்ஸ்டோவ், வோக்ஸ், அடில் ரஷீட், ஜாபர் அன்சாரி, ஸ்ரூவேர்ட் பிரோட், ஸ்ரீவன் பின், பட்லர், அண்டர்சன், ஜேக் போல், ஹரி பலன்ஸ், பேட்டி. (க)

# முத்தரப்பு ஒரு நாள் தொடர்

## மேற்கிந்தியத் தீவுகளின் வேகத்தில் மிரண்டது இலங்கை சிங்கங்கள்

முத்தரப்பு ஒருநாள் தொடரின் 2ஆவது லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 62 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தியது.

இலங்கை, சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் மும்முனை ஒரு நாள் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது.




இததொடரின் முதல் லீக் போட்டியில் இலங்கை அணி சிம்பாப்வே 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வீழ்த்தியிருந்தது.

இந்நிலையில் நேற்று நடந்த 2ஆவது லீக் போட்டியில் இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இதில்நாணயச்சுழற்சியில்வென்ற இலஙகை அணித் தலைவர் உபுல தரங்க முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதன்படி மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய சாள்ஸ் (2), கிரெய்க் பிராத்வெய்ட் (14) நிலைக்கவில்லை.

இதன் பின்னர் வந்த லிவிஸ் 27 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, சாய் கோப் (47) அரைச்சதத்தை தவறவிட்டார்.

தொடர்ந்து தடுமாற்றத்தில் இருந்த மேற்கிந்திய தீவுகள் அணியை ஜொனாதன் கார்ட்டர், ரோவ்மன் பொவல் ஜோடி ஓரளவு மீட்டது.

ஜொனாதன் கார்ட்டர் (54) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். அதிரடியாக ஆடிய ரோவ்மன் பவல் 29 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனபின் வந்தவர்கள் நிலைக்கவில்லை. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.2 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை அணி சார்பில், குலசேகர, சுரங்க லக்மல், நுவன் பிரதீப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி இலங்கை அணி களமிறங்கியது.

தொடக்கம் முதலே அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்ததால் இலங்கை வீரர்களால் மீண்டெழ முடியவில்லை.

இதனால் 43.1 ஓவர்களில் இலங்கை அணி 165 ஓட்டங்களுக்கு சுருண்டு படுதோல்வியடைந்தது.

இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக ஷேகன் ஜெயசூரிய 31, சச்சித் பத்திரன 45 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில், கப்ரியல், அஸ்லி தலா 3, ஜேசன் ஹோல்டர் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜேசன் ஹோல்டர் தெரிவானார். (க)

# பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட கிறைஸ்ட்சேர்ச்சில்

## நியூசிலாந்து - பாகிஸ்தான் மோதும் முதல் டெஸ்ட் இன்று தொடங்குகிறது



நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இப்போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமாகிறது. பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட கிறைஸ்ட்சேர்ச்சில் இடம் பெறவுள்ள இப்போட்டி, இரு அணிகளுக்கும் முக்கியமான போட்டியாக அமையவுள்ளது.

பலமான அணியாகக் கருதப்பட்ட நியூசிலாந்து அணி, இந்தியாவில் வைத்து 3 போட்டிகள் கொண்ட தொடரை, 0:3 என்ற கணக்கில் இழந்திருந்தது. மறுபக்கம் பாகிஸ்தான் அணி, 2014ஆம் ஆண்டு ஓகஸ்டுக்குப் பின்பு, டெஸ்ட் தொடரொன்றில் தோல்வியடையாத தன்னம்பிக்கையுடன் காணப்படுகிறது.

வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமான ஆடுகளங்களாக அமையும் நியூசிலாந்து ஆடுகளங்களில், இரு அணிகளிலும் காணப்படும் திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள், கடுமையான போட்டியை வழங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியத் தொடரில் பங்குபற்றாத நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌதி, இப்போட்டியில் பங்குபற்றுகின்றமை நியூசிலாந்துக்குப் பலத்தை வழங்கும்.

*எதிர்பார்க்கப்படும் அணி விபரம்:*

**நியூசிலாந்து:** ஜீட் றவல், ரொம் லேதம், கேன் வில்லியம்ஸன், றோஸ் ரெய்லர், ஹென்றி நிக்கொல்ஸ், ஜேம்ஸ் நீஷம், பி.ஜே. வோட்லிங், டொட் அஸ்டில், ரிம் சௌதி, நீல் வோக்னர், ட்ரெண்ட் போல்ட்.

**பாகிஸ்தான்:** சமி அஸ்லாம், அஸார் அலி, அசத் ஷபீக், யுனிஸ் கான், மிஸ்பா உல் ஹக், பாபர் அஸாம், சப்ராஸ் அஹமட், வஹாப் றியாஸ், யாசீர் ஷா, மொஹமட் அமிர், சொஹைல் கான். (க)

# உலக கிண்ண தகுதிகாண் கால்பந்தாட்டம்

## ரொனால்டோவின் போர்த்துக்கல் வெற்றி

உலகக்கிண்ண் கால்பந்து தகுதி சுற்று ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் லத்வியாவை வீழ்த்தியது.

32 அணிகள் இடையிலான உலகக்கிண்ண கால்பந்து போட்டி 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடக்கிறது.

இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் கடந்த திங்கட்கிழமை நடந்த லீக் ஆட்டத்தில் போர்த்துக்கல் - லத்வியா அணிகள் மோதின.

இந்த போட்டியில் போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 28வது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஒரு கோல் அடித்தார்.

அதே போல் அவர் 85ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்தார்.

இதைத் தொடர்ந்து வில்லியம் கார்வால்ஹோ 70ஆவது நிமிடத்திலும், புருணோ ஆல்வ்ஸ் 90ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

லத்வியா அணி தரப்பில் அர்துர்ஸ் 67ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தின் முடிவில் போர்த்துக்கல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் லத்வியாவை வீழ்த்தியது.

4ஆவது ஆட்டத்தில் ஆடிய போர்த்துக்கல் அணி பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும்.

அதேபோல் 4ஆவது ஆட்டத்தில் ஆடிய லத்வியா அணிக்கு இது 3ஆவது தோல்வியாகும்.

இந்த பிரிவில் 4 ஆட்டத்தில் ஆடி அனைத்திலும் வெற்றி பெற்று சுவிட்சர்லாந்து அணி முதலிடத்தில் உள்ளது. (செ)



# சித்திரவதைகளில் ஈடுபடுவோருக்கு மன்னிப்பு இல்லை

## சட்டமா அதிபர் அறிவிப்பு

சித்திரவதைகள் விவகாரத்தில் பூச்சிய சகிப்புத்தன்மை என்பதே இலங்கை அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்று சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஐக்கிய நாடுகள் சபையிடம் உறுதியளித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் 59 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்ட போதே இலங்கையின் பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கிச் சென்றுள்ள சட்டமா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கடந்த மார்ச் மாதம் சித்திரவதைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பேரணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் பங்குபற்றியதன் மூலம், சித்திரவதைகளுக்கு எதிரான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளதாகவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியது முதல் மனித உரிமைகள் விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக மனித உரிமை விடயத்துடன் தொடர்புபட்ட கட்டமைப்புக்கள் வெளிப்படைத் தன்மையுடனும், சுதந்திரமாகவும் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதுடன், சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்களும் இதன் அடிப்படையிலேயே அமையும் என்றும் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை முழுமையாக பின்பற்றுவதுடன், அவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவற்றை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சட்டமா அதிபர் தெரிவித்தார். அத்துடன் அரசாங்கம் தானாக முன் வந்து 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதிக்காக தேசிய மனித உரிமை நடவடிக்கை செயற்றிட்ட மொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சட்டமா அதிபர் ஜயநாத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த செயற்றிட்டத்தை தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் மட்ட குழுவொன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவை குழுவிற்கு உதவுவதற்காக அரச அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய நிலையியற் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், இதற்கமைய அவர்கள் சித்திரவதைகளை முற்றாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கவனம்செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார். அதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் தயாரிக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளார். (இ-7-10)

## எம் நெஞ்சத்து நினைவுகளில் நீங்கா ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்

திருமதி **பத்மலோஜினி கனகலிங்கம்**

அன்னை மடியில் 11 01 1948

இறைவன் அடியில் 10 12 2014

கணவனை கடவுளென மதித்து<br>
குடும்பத்தை கோயிலென பூசித்த தெய்வமே!<br>
அன்பென்னும் நீர் பொழிய அள்ளி வீசி<br>
கள்ளமற்ற உள்ளத்தோடு கருத்து வைத்து<br>
பண்பாக மகிமையோடு மக்களெமை வளர்த்து<br>
புண்ணியவதி என பலபேர் ஏற்றிப் போற்ற<br>
ஆண்டிரண்டு கழிந்ததம்மா நீங்கள் நற்கதி சேர்ந்து<br>
உங்கள் செயலும் உங்கள் நினைவும் என்றும்<br>
எம் நெஞ்சை விட்டு நீங்காதம்மா

**உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் இறைவனைத் தொழுது நிற்கும்**

நித்தம் உமது நினைவுடன் வாழும்<br>
அன்புக்கணவன், மக்கள், மருமக்கள்,<br>
பேரப்பிள்ளைகள்.

தர்மலிங்கம் கனகலிங்கம்<br>
67/45 தர்மலிங்கம் அவெனியூ,<br>
கொட்டடி, யாழ்ப்பாணம்.<br>
021 222 7796<br>
077 935 2583

(6612)

## கேள்வி அறிவித்தல்

**250-8542 இலக்க மோட்டார் வான் வாகனத்திற்கு (Hires Van) திருத்த வேலைகளுக்கான கூறுவிலை கோரல்**

மேற்படி எமது நிறுவனத்திற்குச் சொந்தமான வான் (hires) வாகனத்திற்கு முழுமையான ரிங்கறிங் மற்றும் வர்ணம் தீட்டுதல் வேலைகளுக்கான கூறுவிலை (கேள்வி) சாந்திக நிறுவனத்தால் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்பத்திரத்தினை அலுவலகத்தில் நிதிக்கிளையில் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1000/= ஐ செலுத்தி 02-12-2016 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரைபெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் 02-12-2016 ஆம் திகதி 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடனடியாக விண்ணப்பங்கள் நிர்வாகக்குழு அறை (Board Room ) இல் திறக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர், கேள்விச்சபைத் தலைவர், 8.8/1, கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வான் (Hires) வாகனத்திற்கான திருத்த வேலைகள் கூறுவிலை" என குறித்து பதிவுத் தபாலில் 02.12.2016 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வ.முருகதாஸ்<br>
கேள்விச் சபைத்தலைவர்,<br>
பணிப்பாளர்,<br>
சாந்திகம்.

8,8/1,கற்பக விநாயகர் ஒழுங்கை,<br>
கச்சேரி நல்லூர் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

## இராசி பலன்

17.11.2016<br>
(கார்த்திகை 02, வியாழக்கிழமை)<br>
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு<br>
திருதியை பிற்பகல் 1.31 மணிக்கு<br>
மிருகசீரிடம் பிற்பகல் 12.57மணிவரை<br>
சுபநேரம் 7.38-9.08 மணிவரை<br>
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை<br>
சங்கடஹர சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம், கேட்டை | | |
| செவ் | | | ராகு |
| சுக் | சூரி<br>சனி<br>புத | | குரு |

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பயணங்கள் கைகூடும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர் கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையு ண்டு, பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதா யம் கிடைக்கும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்ப டுவீர்கள், மனம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற் றம் ஏற்படும், கௌரவமான நாள்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பயணங் களால் பணவரவு கிடைக்க லாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் தாம தங்கள் ஏற்படலாம், வழிபா ட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

# மோ.சைக்கிள் விபத்து; இளைஞர் படுகாயம்

(கரணவாய்)

தொண்டைமானாறு மயிலியதனைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இவ்விபத்தில் கெருடாவில் தொண்டைமானாறைச் சேர்ந்த சிதம்பரநாதன் தினேஸ்வரன் (வயது-31) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடற்கரை வீதி வழியாக சென்று கொண்டிருந்த இவர் மோட்டார் சைக்கிளின் ஸ்ராண்டினை தட்டாத காரணத்தால் அது வீதியில் உரசி நிலைகுலைந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளான தாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்த பிரஸ்தாப நபர் ஊரணி வைத்தியசாலை. மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-60)



குப்பைகள் கொட்டும் இடம்

யாழ்.கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் குப்பைகள் கொட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் மாத்திரம் கழிவுகளைக் கொட்டுமாறு கரவெட்டிப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

வல்லை-மண்டான் உப்பு றோட்டில் இதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு கொட்டப்பட்டிருந்த கழிவுகள் இயந்திரத்தின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளன.

எனவே அப்பகுதியில் மட்டும் குப்பைகளைக் கொட்டி வெளியில் பறக்காவண்ணம் செயற்படுமாறு பொதுமக்களை கரவெட்டி பிரதேச சபை கோரியுள்ளது. (இ-60)

# சகோதரத்துவத்துடன் வாழவே தமிழர்கள் நாம் விரும்புகிறோம்

## "கைகோர்ப்பு" நிகழ்வில் யாழ்.அரச அதிபர் உரை





இலங்கையர் என்ற ரீதியில் சகோதரத்துவத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழவே தமிழராகிய நாம் விரும்புகிறோம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஊக்குவிப்பிற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டமான "கைகோர்ப்பு" நிகழ்வின் இறுதி நாள் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை யாழ். மாவட் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் ஆலோசனைப்படி வடக்கு மற்றும் தெற்கில் பல்வேறு கருத்தியலாளர்கள் மத்தியிலும் பல்வேறு இனப்பிரிவுகளுக்கு இடையிலும் காணப்படும் புரிந்துணர்வின்மை, நம்பிக்கையீனத்தை நட்புறவான கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களினூடாக ஒழிப்பதற்கு தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அந்த வகையில் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆரம்ப அணுகுமுறையாக நல்லிணக்க அமைச்சினால் கைகோர்ப்பு எனும் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கென மாத்தறை மாவட்டத்திலிருந்து ஒரு குழுவினர் வருகை தந்திருந்தடன் யாழ் மாவட்டத்தினைச் சேர்ந்த பொதுமக்கள் 40 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இக் குழுவினர் பல சமூக சேவைகளை செய்துள்ளதுடன், எமது மக்களுடன் சகோதரத்துவ ரீதியில் பழகிக்கொண்டனர்.

எமது மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊடகங்களும் குறித்த நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கத்தான் விரும்புகிறார்கள். தவறான விளக்கம் சிலர் தரக்கூடும். ஆனால் பலர் ஒற்றுமையாக இருக்கத் தான் விரும்புவார்கள்.

எனவே இவ்வாறான நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று இலங்கையர் என்ற ரீதியில் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வோம் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# நல்லாட்சி எனப்படும் அரசின் சுயரூபம் வெளிப்பட்டுள்ளது

## மார்க்சிச– லெனினிசக் கட்சி அறிக்கை

மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி எனப்படும் இன்றைய அரசாங்கம் முன்வைத்துள்ள 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம். அதன் சுயரூபத்தையும் தவறான திசைமார்க்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. விவசாயம், சிறுகைத்தொழில், மீன்பிடி மற்றும் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரம் நிராகரிக்கப்பட்டு. அந்நிய இறக்குமதிப் பொருளாதாரத்திற்கான வழிவகைகள் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இது முழு நாட்டையும் அதன் பொருளாதாரத்தையும் நவகொலனிய நவதாராள உலகமயமாதலுடன் இறுகப் பிணைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது. தாராள வர்த்தகத்தையும், தனியார்மயத்தையும் நிதிமூலதன வரவழைப்பையும் அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையாக கொண்டே இவ்வரவு- செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்களினதும் கீழ் நடுத்தர வர்க்கத்தினரதும் கழுத்துக்கள் நெரிக்கப்பட்டு வயிறுகள் காயவிடப்படப் போகின்றன. அதேவேளை நாட்டின் சனத்தொகையில் 10 வீதமானவர்களான மேல்தட்டு வர்க்கத்தினருக்கும் அவர்களோடு இணைந்த தரகு முதலாளிகள், அந்நிய முதலீட்டாளர்கள், பெருவணிக நிறுவன முதலாளிகள், அவர்களைப் பாதுகாத்து நிற்கும் ஆளும் வர்க்க அரசியல் சக்திகள் என்போருக்கு வரிச்சலுகைகளும் வரப்பிரசாதங்களும், தாராளமாக கிடைப்பதற்குரிய வழிவகைகளை இவ் வரவு- செலவுத் திட்டம் வழங்கி நிற்கிறது. எனவே இப்போது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் வரவு- செலவுத் திட்டமானது அப்பட்டமான மக்கள் விரோத வரவு- செலவுத் திட்டம் என்பதில் ஐயமில்லை. இதனை எமது கட்சி வன்மையாகக் கண்டித்து எதிர்த்து நிற்கின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் மத்திய குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் வரவு- செலவுத்திட்டம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், இவ்வரவு- செலவுத் திட்டமானது சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 1.5பில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறுவதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அந்நிய முதலீட்டாளர்களுக்கும் நிதி மூலதனக்காரர்களுக்கும் அழைப்பு விடுக்கும் நோக்கத்தை உள்ளடக்கி நிற்கின்றது. மேலும் வரவு- செலவுத்திட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மறைமுக வரிகள் மூலம் குறிப்பாக 15வீத வற்வரி எனப்படும் பெறுமதி சேர் வரி விதிப்பினால் அனைத்து உழைக்கும் மக்களும் கடுமையான வாழ்க்கை நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். விவசாயம், சிறுகைத்தொழில்கள், மீன்பிடி போன்றவற்றிற்கு அற்ப நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை கல்வி, சுகாதாரத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வெட்டிக்குறைக்கப்பட்டுள்ளன.

இத்துறைகளில் தனியார் மயத்திற்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தொலைபேசிகளுக்கான வரிகள், நீர்க்கட்டண உயர்வு, போக்குவரத்துத், தண்டப்பணம் போன்றவற்றுள் கொள்ளை இலாப அறவீடுகளை நிதியமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

எனவே இவ்வரவு- செலவுத்திட்டம் வெளிப்படையாகவும் மறைமுகமாகம் உழைக்கும் மக்களையும் கீழ் நடுத்தர வர்க்க மக்களையும் கருவறுக்கும் ஒரு வரவு- செலவு திட்டமாகவே காணமுடிகிறது. இது நல்லாட்சி அரசாங்கம் அல்ல. மக்கள் விரோத அரசாங்கம் தான் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனை மக்கள் கண்டித்து எதிர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை எமது கட்சி விடுக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கலை இலக்கியப் பெருவிழா

யாழ்.பிரதேச செயலகம் கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையுடன் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பிரதான வீதி திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.


யாழ். பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவை, கலாசார அதிகார சபைத் தலைவருமான பொன்னம்பலம் தயானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சுப்பிரமணியம் முரளிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# செல்வச்சந்நிதியில் திருக்கல்யாணம்

(யாழ்ப்பாணம்)


தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் முருகப் பெருமான்- வள்ளி அம்மன் திருக்கல்யாண திருவிழா நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணியளவில் இடம்பெறும். (இ-7)







வீதி விபத்துக்களை தடுக்கும் முகமாக பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து நெல்லியடி பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி.பியந்த தலைமையில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொண்டனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)





பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாண கிளையின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் யாழ்.நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)

## 'இது எனது கணவர் என்று' ஒருவரின் சடலத்துக்கு மூவர் உரிமை கோரல்

"இது எனது கணவர்" என சடலமொன்றுக்கு மூன்று பெண்கள் உரிமை கோரி நீதிமன்றின் உதவியை நாடியுள்ளனர்.

கம்பஹா மேலதிக நீதவான் நீதிமன்றில் இந்த விசித்திரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகன விபத்து ஒன்றில் உயிரிழந்த நபர் தமது கணவர் எனவும் அவரது சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறும் கோரி மூன்று பெண்கள் உரிமை கோரியுள்ளனர்.

குறித்த மூன்று பெண்களும் சட்ட ரீதியான விவாக சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகளை நடத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மூன்று பெண்களுக்கும், கம்பஹா மேலதிக நீதவான் லலித் கண்ணங்கர உத்தரவிட்டுள்ளார்.

யக்கல கிரிந்திவெல வீதியில் கடந்த 13ம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற 44 வயதான சரத் பண்டார என்பவர் விபத்துக்கு உள்ளாகி படுகாயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி அதே தினத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனை கடந்த 14 ஆம் திகதி கம்பஹா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பேற்றுக்கொள்ள மூன்று மனைவியர் வைத்தியசாலையில் முன்னிலையாகியுள்ளனர்.

இதன் காரணமாக குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் பொலிஸார் நீதிமன்றிற்கு அறிவித்திருந்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் ரம்புக்கன கொட்டுவல்ல பிரதேசத்தில் 1996 ஆம் ஆண்டில் பெண் ஒருவரை சட்ட ரீதியாக திருமணம் செய்து கொண்டுள்ளார்.

மேலும் 2005 ஆம் ஆண்டில் தெரனியகல மஹாவதென்ன மற்றும் மல்வத்துகிரிபிட்டிய அபகஸ்பிட்டிய என்னும் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பெண்களையும் சட்டரீதியாக திருமணம் செய்து கொண்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் ஒரு மனைவிக்கு தலா இரண்டு பிள்ளைகள் என்ற அடிப்படையில் மொத்தமாக ஆறு பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

இந்த மூன்று குடும்பத்தையும் உயிரிழந்த நபர் நன்றாக பராமரித்துள்ளார் என நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கட்டுநாயக்க பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டவர் எனவும், இரகசியமான முறையில் மூன்று பெண்களுடனும் குடும்பம் நடத்தியுள்ளார்.

இறுதியாக திருமணம் செய்து கொண்ட பெண், பத்து ஆண்டுகள் குடும்பம் நடத்திய தமது கணவரின் சடலத்தை ஒரு மணித்தியாலமேனும் வீட்டில் வைத்திருக்க அனுமதியளிக்குமாறு கோரியுள்ளார். (இ-7-10)


உ

சிவமயம்

# பூப்புனித நீராட்டு விழா அமைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷம் கார்த்திகைத்திங்கள் 05 ஆம் நாள் (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.10 மணி தொடக்கம் 10.45 மணி வரையுள்ள ஷஷ்டி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் விட்கரணமும் கூடிய சுப நன்னாளில்

எமது புத்திரிகளான திருவளர் செல்விகள்

S.வினித்தா அவர்களுக்கும் S.அபிராமி அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் "எமது இல்லத்தில்" பூப்புனித நீராட்டு விழா நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்விகளை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்டாரி அம்மன் கோவில் பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்
தம்பசிட்டி ,பருத்தித்துறை.
T.P-077 670 1678 ,021 226 3944

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்,
திரு.திருமதி சிவஸ்ரீ சிதம்பரசபாரத்தினக்குருக்கள் செல்வராணி
தம்பதியினர்.

(6419)


# அறிவித்தல்

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ-து) கிளைக் குழுக்களை தெரிவு செய்தல் 19.11.2016 (சனிக்கிழமை)

1989ம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படும் 1983 ம் ஆண்டின் 32ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச) சட்டத்தினாலும் 1992 ம் ஆண்டின் 11 ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் என்மீது பாரிக்கப்பட்டதும் வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ம் திகதிய 1028/06 ம் இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகள்" இற்கு அமைய வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983 ம் ஆண்டின் 32 ம் இலக்கம் கொண்டதும் 1992 ம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்டதுமான கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும். 1972 ம் ஆண்டின் 5 ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதி 20(2) ற்கு அமைய குறித்த சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி என்னால் பெயர் குறித்து அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் (தவிசாளர்) நடாத்தப்படும் என சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

கிளை பொதுச் சபைக் கூட்டம் -19.11.2016 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி.
கூட்டம் நடைபெறும் இடங்கள் மற்றும் தவிசாளரின் பெயர் விபரங்கள்:-

| இல. | கிளை இலக்கம் | கிளைப்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 69 | மானிப்பாய் | சங்க தலைமைக்காரியாலயம் | திரு.ப.தவப்பிரியன் |
| 02 | 70 | மடத்தடி | சிவசக்தி சனசமூக நிலையம் சண்டிலிப்பாய் | திரு.வ.கிரிசாந். |
| 03 | 71 | சீரணி | உதயசூரியன் சனசமூக நிலையம் சண்டிலிப்பாய் | திரு.சி.பிரதீபன் |
| 04 | 72 | மாகியப்பிட்டி | சிறிஅம்பாள் சனசமூக நிலையம் மாகியப்பிட்டி | திரு.ச.அருள்நாதன் |
| 05 | 78 | நவாலி | மதிஒளி சனசமூக நிலையம் நவாலி | திரு.அ.விமல்ராஜ் |
| 06 | 79 | மில்லடி | சங்க தலைமைக்காரியாலயம் | திரு.இ.தனுஷன் |
| 07 | 80 | சுதுமலை | யுவசக்தி சனசமூக நிலையம் சுதுமலை | திரு.சி.சிறிதரன் |
| 08 | 81 | கூழாவடி | கிளை இல.81 கூழாவடி | திரு.ஜெ.சதீஸ் |
| 09 | 82 | ஆனைக்கோட்டை | ஆதவன் முன்பள்ளி ஆனைக்கோட்டை | திரு.க.சசிகரன் |

- ♦ இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட தவிசாளர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- ♦ கிளை பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகம் அளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினர் அல்லது 25. இதில் எது குறைவானதோ அத்தொகை ஆகும்.
- ♦ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையிலிருந்து கிளைக் குழுவிற்கான 9 உறுப்பினர்களை தெரிவு செய்யும் படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இதில் இருவர் 18-35 வயதிற்குட்பட்டவராயும் ஒருவர் மகளிர் குழு உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.
- ♦ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 9 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- ♦ 2 வேட்பாளருக்கு அல்லது 2 க்கு மேற்பட்ட வேட்பாளருக்கு சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- ♦ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

மாகாண கூட்டுறவு
அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
கைதடி.

ஒப்பம்
திருமதி மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாணம்.

(சி/6414)

# ராணுவம் முட்கம்பி வேலி அமைப்பதால் கடற்கரையோரம் செல்ல முடியாத நிலை

## குடியேறும் மக்களின் தொழில் வளம் பாதிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியால் வலி. வடக்குப் பகுதிகளில் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளின் கரையோரங்களுக்குள் யாரும் செல்ல முடியாதவாறு இராணுவம் புதிதாக முட்கம்பி வேலிகள் அமைத்து வருகின்றது. இதனால் தம்மால் கடற்றொழில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் கவலை வெளியிட்டுள்ள அப்பகுதி மக்கள் மயிலிட்டி துறைமுகத்தை விடுவித்தால் மாத்திரமே அங்கு குடியேறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காங்கேசன்துறை மத்தி. காங்கேசன்துறை தெற்கு, தையிட்டி கிழக்கு, தையிட்டி வடக்கு மற்றும் தையிட்டி தெற்கு ஆகிய இடங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. இந்த இடங்கள் கரையோரத்தோடு இணைந்து காணப்படுவதால் அப்பகுதி மக்களில் பெரும்பான்மையினர் கடற்றொழிலையே மேற்கொண்டு வந்தனர்.

குறித்த காணிகள் 28 வருடங்களின் பின்னர் ஜனாதிபதியால் கடந்த 31 ஆம் திகதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து பொது மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்டு நேற்று வரை 650 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 170 பேர் அங்கு மீளகுடியேறுவதற்காக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

மேலும் விடுவிக்கப்பட்ட காணிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளிலும் அப்பகுதி மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் இராணுவத்தினர் கடற்கரையோரங்களுக்குள் யாரும் செல்ல முடியாதவாறு முட்கம்பி மற்றும் தடிகளை பயன்படுத்தி வேலிகளை அமைத்து வருகின்றனர். இதனால் கடற்றொழிலாளர்களாக உள்ள அப்பகுதி மக்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமது சொந்தத் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படாத நிலையில் தாம் எவ்வாறு அங்கு மீள்குடியேற முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியால் காணி விடுவிக்கப்பட்டு ஒரு சில நாட்களிலேயே குறித்த வேலிகளை இராணுவம் அமைக்க ஆரம்பித்துள்ளது என தெரிவிக்கும் மக்கள், கடலை எட்டிப்பார்ப்பதற்குக் கூட இராணுவம் அனுமதி மறுத்து வருகின்றது எனவும் தெரிவிக்கின்றனர். தமது இந்த அவலநிலை தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலர் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா ஆகியோரிடம் முறையிட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இராணுவம் முட்கம்பி வேலிகள் அமைத்து வரும் கடற்கரையோரத்தில் இராணுவத்தின் குடியிருப்பு, ஓய்வு விடுதி, பங்களா போன்றவை காணப்படுவதோடு, ஒவ்வொரு முகாமிற்கும்முன்னால் ஒவ்வொரு இராணுவத்தினர் நிலை கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இதற்கு எதிரே காணி துப்புரவு நடவடிக்கையில் ஈடுபடும் மக்கள் அசௌகரிய நிலைக்கு ஆளாகி வருவதனையும் அவதானிக்க முடிந்தது. (செ-4)

# பரிசளிப்பு விழாவும் நாவலர் குருபூசையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புதினமும் ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினமும் இன்று வியாழக் கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பொ.தயாணந்தன், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# கருத்தமர்வும் தளவாசல் காலாண்டிதழ் பகிர்வும்

(யாழ்ப்பாணம்)

எழு கலை இலக்கியப் பேரவையின் சிறப்புக் கருத்தமர்வும் தளவாசல் கலை ,இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ் பற்றிய பகிர்வும் நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

எழுகலை இலக்கியப்பேரவை போசகர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் "அரச நிர்வாகத்தில் அடித்தள மக்களுக்கான தொடர்பாடல்" எனும் தலைப்பில் கலாநிதி சி.ரகுராம் சிறப்புக் கருத்துரைப்பினை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் "தளவாசல் இதழ் பற்றிய பகிர்தலை" வழங்குவார். (இ-7)





பருத்தித்துறை நகரசபையின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. இதில் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (படங்கள் கரணவாய் செய்தியாளர்)

# தற்செயல் நிவாரணம் பெறலாம்

(கரணவாய்)

யாழ்.கரவெட்டி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 42 பயனாளிகளுக்கான 2015 ஆம் ஆண்டிற்கானதற்செயல் நிவாரண கொடுப்பன சமூக சேவைப்பிரிவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே 42 பயனாளிகளும் சமூக சேவைபிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-60)

# தீட்சை வழங்கல்

யாழ்.இந்து சமயப் பேரவையினால் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் நடராஜர் மண்டபத்தில் கிரியாக்கிரம ஜோதி சிவஸ்ரீ. ச. சோமாஸ்கந்த சிவாச்சாரியாரால் சமய , விசேட தீட்சைகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் அறிவித்துள்ளார். (இ-7)

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இதழியல் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். நகர் ஜும்மாபள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி மைய மண்டபத்தில் இடம்பெறும்.

ஊடக வளங்கள் பயற்சி மையத்தின் பணிப்பாளர் தே. தேவானந்த் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# நாவலர் விழா நாளை

யாழ்.இந்துக் கல்லூரியும் சைவ பரிபாலன சபையும் இணைந்து நடத்தும் நாவலர் விழா நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ், வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-7)

# மனித உருவில் நாய்; வியப்பில் வவுனியா



வவுனியா தோணிக்கல் பகுதியில் நேற்று முன்தினம் வீடொன்றில் வளர்த்த நாய், குட்டிகள் ஈன்றுள்ளது.அதில் ஒரு குட்டி விசித்திர உருவத்தில் பிறந்துள்ளது.

அதாவது மனிதனைப் போல் கை. கால்கள் உருவம் கொண்டுள்ளது.குறித்த விசித்திர நாய்க் குட்டியை பிரதேச மக்கள் பலரும் பார்வையிட சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவமானது பிரதேச மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. எனினும் இக்குட்டி பிறந்த சில மணி நேரங்களில் மரணித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்

## அமரர் திரு. சின்னவன் நல்லதம்பி



இமையாணன் மேற்கு கோம்பைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தி "நிவேதாஅகம்" கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு சின்னவன் நல்லதம்பி அவர்கள் 15.11.2016 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் நாகி அவர்களின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அசுபதி அவர்களின் மருமகனும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை கார்த்திகேசு அவர்களின் அன்புச் சகோதரனும் அமரர் நல்லதம்பி சரஸ்வதியின் அன்புத் கணவரும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி (சுவிஸ்), நிர்மலன் (லண்டன்), நிரஞ்சன் (ஆசிரியர்-கிளி/பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திலகவதியின் மைத்துனனும் சிவலிங்கம், வைகுந்தநாதன் (சுவிஸ்), சிந்துஜா (லண்டன்), கீர்த்திகா ஆகியோரின் மாமனாரும் நிரோசன் (சுவிஸ்), நிவேதா (சுவிஸ்), நிரூபிகா(சுவிஸ்), மிதிலா (சுவிஸ்), கிருஷாந்தன் (பிரான்ஸ்), நவமனிஷா(லண்டன்) ஆகியோரின் அன்புத் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17-11-2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் முற்பகல் 10 மணியளவில் வல்வை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(வி/6420)


கரணவாய் மத்தி கரவெட்டி
T.P.021 226 1366

தகவல்:-
குடும்பத்தினர்.

# 70 கிலோ கேரளா கஞ்சா சிக்கியது

## எட்டு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது





யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட 70 கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஏ-9 வீதி, நொச்சிமோட்டைப் பாலத்திற்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் இக் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம், மாதகல் பகுதியில் இருந்து கொழும்பு கொச்சிக்கடை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சந்தேகத்திற்கிடமான குறித்த ஹயஸ் வாகனத்தை நொச்சிமோட்டைப் பகுதியில் மறித்து சோதனை செய்த போது அதன் இருக்கைகளில் சூட்சுமமான முறையில் 70 கிலோ கேரளா கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டன. குறித்த வாகனத்தையும் அதில் பயணித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8 இளைஞர்களையும் கைது செய்துள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலை இலக்கிய விழா நடைபெற்றது

(மல்லாவி)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலை இலக்கியவிழா ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனுருத்தனன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனச் சந்தியிலிருந்து ஊர்வலமாக பாரம்பரிய பண்பாட்டு கலைகளையும் விவசாய முறைகளையும் பிரதிபலிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளும் நட்ன நிகழ்வுகளும் மாவீரன் பண்டார வன்னியனை சித்தரிக்கும் முகமாக ஊர்வலமாக பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. அங்கு தேசியக் கொடி ஏற்றப்பட்டு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சித்தரிக்கும் முகமாக முத்தெழில் மலர் நூல் வெளியீடும் மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் வெளியிட்டு வைக்க வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசர் பெற்றுக் கொண்டார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பாரம்பரிய நடனங்கள், நாடகக் கலைகளும் இடம்பெற்றன. இதற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)










முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலை இலக்கிய விழா நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனுருத்தனன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது... (படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

# தமிழ் மக்கள் விடுதலையாளர்களாக மாறவில்லை வெறும் வாக்காளர்களாக இருக்கின்றார்கள்

## மன்னார் வெகுஜன அமைப்புக்களின் தலைவர் தெரிவிப்பு

(பரந்தன்)

தமிழ் மக்கள் இப்பொழுது வெறும் வாக்காளர்களாக இருக்கின்றார்கள். தமிழ் மக்கள் வெறும் வாக்காளர்களாக இருக்கும் வரை இந்த நிலைமை தொடரும். தமிழ் மக்கள் விடுதலையாளர்களாக மாறவில்லை. இந்த நிலையால் தான் வெறுமனே வாக்களித்துவிட்டு வீட்டுக்குச் சென்றுவிடுகிறோம் என தமிழரசு கட்சியின் முன்னாள் இளைஞர் அணி தலைவரும், முன்னாள் வெகுஜன அமைப்புக்களின் தலைவருமான சிவகரன் தெரித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற அரசியல் கைதி விவேகானதனூர் சதீசின் விடியலைத் தேடும் இரவுகள் மற்றும் இரும்புக் கதவுக்குள்ளிருந்த எனும் இரண்டு நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் உரையாற்றுகையில்,

அடிமைகளின் கல்லறைகளை விட தோற்றுப் போனவர்களின் கல்லறைகளுக்கு வரலாறு அதிகம். இது கார்த்திகை மாதம் விடுதலை என்கின்ற நோக்கோடு தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த அந்த வீர மறவர்களின் நாட்களை நெருங்குகின்ற காலகட்டத்தில், இந்த விடுதலை எனும் நோக்கை இறுதிவரை காவியங்களை நிகழ்த்திய இந்தக் காலத்தில் இவ்வாறன நிகழ்வு நெகிழ்ச்சியானதொன்று.

என்ன செய்வது சத்தியத்திற்கு ஒரு போதும் சரிவு வருவதில்லை, சற்று சலர்ச்சி தான் ஏற்படும். ஆனால் அந்த சரிவுகளையும் சந்தித்து தான் ஆகவேண்டிய நிலை யில் இந்த இனம் இருக்கிறது.

வெறுமனே நான் ஏலவே சொன்னது போல் இலட்சியம் அற்ற கோசங்கள். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் நிலைப்பாடு என்ன? ஒவ்வொரு குடும்பங்களின் நிலைப்பாடு என்ன? என எவ்வாறான தகவல்களை நாங்கள் சேகரித்து வைத்திருக்கின்றோம். எத்தனை விதவைகள் இருக்கின்றார்கள்? எத்தனை அநாதைகள் இருக்கின்றார்கள்? எத்தனை அங்கவீனர்கள் இருக்கின்றார்கள்? எத்தனை பேர் காணாமல் போயுள்ளார்கள்? எத்தனை பேர் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள்? ஐ.நாவின் தகவலின் படி ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 608 பேர் காணாமல் போனார்களா? படுகொலை செய்யப்பட்டார்களா? என்ற ஒரு வாதம் உண்டு.

ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்பெறக் கூடிய சூழல் வகுப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் தமிழ் மக்களின் போக்கு எங்கே போய்விடுமோ என்று சொல்லத் தெரியவில்லை.

உண்மையை பேசுகின்ற போது சேக்ஸ்பியர் மகாத்மா காந்தியை நீ மிகப்பெரும் பயங்கரவாதி என்றார். ஏனய்யா என்னை பயங்கரவாதி என்கிறீர்கள் என்று கேட்க சேக்ஸ்பியர் சொன்னராம் நீ உண்மையை பகிரங்கமாக பேசுகின்றாய் என்று. நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே இந்த நிலைப்பாடுகளில் இருந்துகொண்டு நாங்கள் தெளிந்துகொண்டு இவர்களுடைய விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் ஆக்கபூர்வமாக செயலாற்றி எல்லோரும் ஒத்துழைத்து அவர்களுடைய சுபீட்சமான எதிர்காலத்திற்கும், சந்தோசமான வாழ்க்கைக்கும் பொறுப்புள்ளவர்கள் பொறுப்போடும் விருப்போடும் செயற்படவேண்டும் என்றார். (2-312)



முள்ளியவளை பொலிஸ் நிலையத்தின் "பொதுமக்கள் பொலிஸ் பிரிவினரும் பொலிஸாரும் சமுர்த்தி சங்கங்களும் இணைந்து வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் கடந்த 12 ஆம் திகதி சிரமதானப் பணி இடம்பெற்றதை படத்தில் காணலாம். (படம்: வற்றாப்பளை செய்தியாளர்)

## கல்லாறு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகம்

### சிறுவர்களும் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு

கிளிநொச்சி கல்லாறுப்பகுதியில் 14 வயதிற்கும் மேற்பட்ட சிறுவர்கள், பாடசாலைகளுக்குச் செல்லாது சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ள இப்பகுதி பொது அமைப்புக்கள், தற்போது தமது கிராமத்தில் 17 வயதுக்கும் குறைந்த 14 வயது வரையான சிறுவர்கள், பாடாலைகளுக்கு செல்லாது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளுடன் தொடர்புபட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து சிறுவர்களின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்த வேண்டும் எனவும் கிராமமட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, இப்பகுதியில் வசித்து வரும் 17 வயதுடைய ஒருவன் 25 போத்தல் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டும் மற்றுமொரு சிறுவன் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பிலும் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக அச்சுவேலியில் அமைந்துள்ள சான்றுபெற்ற பாடசாலையில் வைத்து பராமரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)



புலம்பெயர் உறவான அவுஸ்திரேலியா வாழ் அன்பர் ஒருவரின் மகனின் பிறந்த நாளை முன்னிட்டு முள்ளியவளையில் உள்ள பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்தில் உள்ள 108 சிறார்களுக்கு புத்தாடைகள் தைப்பதற்காக 209 பருத்தித் துணிகள் மற்றும் 144 சொக்லேட் , 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016



*கோபத்தை வெளிக்காட்டாமல் செயற்படும் மேட ராசி நேயர்களே!*

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, உங்கள் ராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று குருவால் பார்க்கப்படுகின்றார். 9 இற்கு அதிபதி குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராசிநாதனைப் பார்க்கிற பொழுது தொட்டது துலங்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். வெற்றிச் செய்திகள் வந்துகொண்டேஇருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வாயிலாக பொருள்வரவு கூடும்.

மதிப்பும், மரியாதையும் உயரும். புகழ் மிக்கவர்களின் பின்னணியில் நீங்கள் வெற்றிநடை போடுவீர்கள். புதிய பாதை புலப்படும். பூமி வாங்கும் யோகம் முதல் பொருள் வாங்கும் யோகம் வரை சாமி துணையோடு சகலமும் தானாகவே நடந்தேறும். இது போன்ற நேரங்களில் நீங்கள் எடுக்கும் புது முயற்சிகள் மட்டுமல்லாமல், தாமதப்பட்ட காரியங்களும் துரிதமாக நடைபெறத்தொடங்கும்.

அஷ்டமத்தில் சனி கொஞ்சம் வலிமை இழந்திருக்கும் நேரமிது. எனவே ஆரோக்கியத்தொல்லை அடியோடு அகலும். இது வரை நீங்கள் பார்த்தும் பலன் தராத மருத்துவம் இப்பொழுது பலன் கொடுக்கும். செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அதில் செழிப்பும், சேமிப்பும் அதிகரிக்கும். சலித்துக் கொண்டே வேலை பார்த்த நீங்கள் இனி சந்தோஷத்தோடு பணிபுரியப் போகிறீர்கள்.

புத ஆதித்ய யோகம் இருப்பதால், பிள்ளைகளின் கல்வி முயற்சி அல்லது கல்யாண முயற்சிகளில் கவனத்தைச் செலுத்தினால் அது கைகூடும். 6 இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதியும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே நீங்கள் திட்டமிடாது செயற்பட்டால் கூட அது வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். தலைதூக்கிய சொத்துப் பிரச்சினைகள் தானாக மாறும். உடன்பிறப்புக்களோடு ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகி ஒத்துழைப்பு கிடைக்கும்.

பஞ்சம ராகுவும், 11 ஆம் இடத்து கேதுவும் நெஞ்சம் மகிழும் விதத்தில் பலன் தரவும், நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகவும் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. திருக்கார்த்திகைத் திருநாளில் கந்தப் பெருமானை சொந்தப் பெருமானாக நினைத்து வழிபட்டால் எந்த நாளும் இனிய நாளாக மாறும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

## வளர்ச்சி பெருகும்

நவம்பர் 25 ஆம் திகதி புதன், தனுசு ராசிக்குச் செல்கின்றார். 3, 6 இற்கு அதிபதி 9 இல் சஞ்சரிக்கும் பொழுது கூடப்பிறந்தவர்களோடு ஏற்பட்ட தகராறுகள் அகலும். பாகப்பிரிவினை நீங்கள் விரும்பியபடியே அமையும். வீடு கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். மாமன், மைத்துனர்களின் உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும்.

மகர சுக்ரனின் சஞ்சாரம்!

டிசெம்பர் 4 ஆம் திகதி மகர ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 2,7 இற்கு அதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியிலும் வருமானம் வந்து சேரும். எனவே குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண்களால் பெருமை சேரும் நேரமிது.




கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். பெற்றோர்களின் ஆதரவு கூடும். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் கிடைக்கும். வாங்கிய சொத்துக்களை விற்பதன் மூலம் வாங்கிக் கடன்களை நிவர்த்தி செய்து கொள்வீர்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடி பொறுப்புகள் கிடைக்கலாம். இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபாடு செய்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனநிறைவு ஏற்படும். நீண்ட நாட்களாக நடைபெறாத சில சுபகாரியங்கள் இப்பொழுது படிப்படியாக நடைபெறத் தொடங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்கும். திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். இருவர் முயற்சியிலும் வரும் பணத்தைக் கொண்டு உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக் கொள்வது நல்லது. புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று தெய்வங்களை தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கும். வியாழக்கிழமை குரு வழிபாடும், நாகசாந்திப் பரிகாரமும் நன்மையை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*எத்தனை போராட்டங்கள் வந்தாலும் .நினைத்ததை சாதித்துக் காட்டும் ரிஷப இராசி நேயர்களே!*

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியில் சந்திரன் உச்சம் பெறுகின்றார். அப்படி உச்சம் பெற்ற சந்திரனை குரு பகவான் பார்க்கின்றார். எனவே குருச்சந்திர யோகம் உண்டாகின்றது. அதே நேரத்தில் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயையும் குரு பார்க்கின்றார். எனவே குரு மங்கள யோகமும் உண்டாகின்றது. எனவே எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம். மாதத் தொடக்கத்திலேயே மகத்துவமான பலன் உங்களுக்கு கிடைக்கும். சூரிய பார்வை இருப்பதால் அரசியல் மற்றும் பொதுநலனில் இருப்பவர்களுக்கு அதிகப் பொறுப்புகளும், புதிய பதவிகளும் வந்து சேரலாம்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். தொழிலைப் பொறுத்த வரை 10 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் எதிர்பார்த்தபடியே இலாபம் கிடைக்கும். 10க்கு அதிபதி சனி பகவான் கொஞ்சம் வலிமை இழந்து இருக்கின்றார்.

எனவே ஒரு சிலருக்கு வரவேண்டிய தொகை நிலுவையில் இருக்கும். தெசாபுத்தி வலுவிழந்தவர்களுக்கு போராடி வாங்கும் சூழ்நிலை கூட ஏற்படலாம்.

ராசிநாதன் சுக்ரன் அஷ்டமத்தில் மறைந்து இருப்பது யோகம் தான். 6 இற்கு அதிபதி 8 இல் மறையும் பொழுது விபரீத ராஜயோகம் உண்டாகும்.

இக்காலம் ஒரு பொற்காலமாக மாறும். பெண் வழிப்பிரச்சினைகள் அகலும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். பகையான நட்புகள் உறவாகும். பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் நீங்கும். மேலதிகாரிகளிடம் இருந்த

## வாய்ப்புக்கள் குவியும்

கருத்து மோதல்கள் அகலும். உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைத்தது கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

சுக ஸ்தானத்தில் ராகு இருப்பதால் சுகங்களும், சந்தோஷங்களும் கிடைக்க துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வீர்கள். திருக்கார்த்திகைத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடுவதோடு, சிவாலயத்தில் சொக்கப்பனை மூலம் ஏற்றப்படும் ஜோதியைக் கண்டும் வழிபட்டு வாருங்கள்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். 2, 5இற்கு அதிபதியானவர் 8 ஆம் இடத்தில் மறைந்தாலும், மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே, பணக்கவலை தீரும்.

பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் பல வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்க வழிவகுப்பர்.




குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட தொல்லை அகலும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை தீரும்.

மகர சுக்ரனின் சஞ்சாரம்!

டிசெம்பர் 4 ஆம் திகதி மகர ராசிக்கு சுக்ரன் செல்கிறார். ராசிநாதன் 9 ஆம் இடத்திற்குச் செல்லும் பொழுது வாகன யோகம் உண்டாகும். கடல் பயணங்களும், விமானப் பயணங்களும் கைகூடலாம். பூர்வீக சொத்துக்களில் முறையான பங்குகள் கிடைத்து மகிழ்ச்சி காண்பர். சுக்ரபலம் நன்றாக இருக்கும் பொழுது தங்க நகைகள் வாங்கிச் சேர்க்கும் யோகம் உண்டு.

கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். 12 இற்கு அதிபதியான செவ்வாய் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம், ஊர்மாற்றங்கள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். உத்தியோகத்தில் இல்லாதவர்களுக்கு செய்த முயற்சிகள் பலன் தந்து, உத்தியோகம் கிடைக்கும். சகோதரர்கள் பாசமாக நடந்து கொள்வர். 7 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாழ்க்கைத் துணையாலும் யோகம் வந்து சேரும்.


பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

இம்மாதம் புதிய வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும். புகழ்மிக்கவர்களின் தொடர்பால் பணப்பிரச்சினைகள் அகலும். மாமன் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கடந்த காலத்தில் நடைபெறாத சில காரியங்கள் இம்மாதத்தில் துரிதமாக நடைபெறும். அலுவலகப் பணியில் இருந்த அல்லல்கள் அகலும். கடன் அட்டைகள் மற்றும் காசோலைகளைக் கையாளும் பொழுது கவனமுடன் செயற்படுவது நல்லது. குழந்தைகளின் கல்விக்காகவும், உத்தியோக நலன் கருதியும் எடுத்த முயற்சிகள் அனுகூலமாக நடைபெறும். மாதத்தின் மையப் பகுதியில் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. திருக்கார்த்திகை நாளில் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது. வாரவழிபாடாக வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)

ஜீ.எல். இன் கட்சியுடன் சம சமாஜ கட்சி இணையும்...!

திஸ்ஸ விதாரன (செய்தி)




# இலங்கையில் ஆட்சி மாறினாலும் வெள்ளைவான் கடத்தல் தொடர்கிறது

## ஐ.நா. குழு அதிர்ச்சித் தகவல்

(ஜெனிவா)

இலங்கையில் கடந்த ஆண்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த போதிலும், வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்கின்றன என்று சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் துணைத்தலைவர் பெலிஸ் காயர் தெரிவித்துள்ளார்.



சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் 59ஆவது கூட்டத்தொடரிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'கடந்த ஆண்டிலும் வெள்ளை வான் கடத்தல்கள் இடம்பெற்றிருப்பதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவுக்கு முறையிட்டுள்ளன.

2012 தொடக்கம் 2016 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போர் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக பொலிஸாருக்கு எதிராக 100இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் துணைத்தலைவர் பெலிஸ் காயர் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் 59ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான மீளாய்வு நேற்று முன்தினம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 115 | 20 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 40 | 50 | 50 | 80 |
| தக்காளி | 50 | 80 | 50 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 35 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 40 | 80 | 70 | 80 |
| கரட் | 120 | 140 | 70 | 80-120 | 80 | 140 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 30 | 50 |
| புடோல் | 50 | 40 | 30 | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 30 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 85 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 100 | 160 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 160 | 100 | 60 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 140 | 90 | 100-120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 120 | 105 | 160 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 40 | 30 | 80 | 60 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 180 | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 30 | 50 | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 500 | 600 | 450 | 600 | 550 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 40 | 50 | 35 | 35-45 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 240 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 60 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | — | — | 50 | — |

# சிறைக்குள் பேரறிவு

12

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



**"எப்போதும் என்ன நிகழ்கிறது என்றால் ஏழைதான், ஏமாளிதான், நீக்ரோ தான், கறுப்பு மனிதன் தான் தூக்கிலிடப்படுகிறான். பணம் படைத்தவன், வெள்ளைக்காரன் தப்பித்துக் கொள்கிறான். உள்ள படியான இந்தப் பாகுபாட்டை நம்மால் சகித்துக்கொள்ள முடியாது என தனது தீர்ப்பொன்றில் குறிப்பிட்டார் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி மார்ஷல்."**


...'தடா' சட்டத்தின் அடுத்த மோசமான சரத்து எதுவெனில், சட்டப்படியான ஒரு மேல்முறையீட்டு வாய்ப்பைத் தட்டிப்பறிக்கும் பிரிவு 19 ஆகும். சாதாரணமாக, ஒரு கொலை வழக்கைக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் (C.R.P.C.) மாவட்ட அமர்வு நீதிபதி அல்லது கூடுதல் நீதிபதி பதவி வகிப்பவர் விசாரித்துவிட்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC)படி ஆயுள் அல்லது தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பளிக்கிறார். தூக்குத் தண்டனை அளித்துவிட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 366 இன் கீழ் இரண்டு நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு அதனை உறுதிசெய்த பின்பே தண்டனையை நிறைவேற்ற முடியும். இந்த எல்லா அடிப்படை உரிமைகளையும் மறுத்துவிடுகிறது 'தடா' சட்டம்.

இறுதித் தீர்ப்பு மட்டுமல்ல, 'தடா' நீதிமன்றம் அளித்திடும் எந்த உத்தரவை எதிர்த்தும் உயர்நீதிமன்றத்தை அணுகிவிட முடியாது. உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே மேல்முறையீடு செய்ய முடியும். 'தடா' சிறப்பு நீதிமன்றத்தை அமைக்கும் உரிமை, அதற்கான நீதிபதியைத் தேர்வு செய்யும் உரிமை நீதித்துறைக்குக் கிடையாது. நடுவண், மாநில அரசுகளுக்கு மட்டுமே உண்டு என்கிறது தடா சட்டம் (பிரிவு 9): நடுவண், மாநில அரசுகளுக்குள் இணக்கமான கருத்து ஏற்படாச் சூழலில் நடுவண் அரசின் முடிவே இறுதியானது என்கிறது சட்டம். அந்தத் 'தடா' நீதிமன்றம் எந்த இடத்திலும் தனது விசாரணையை வைத்துக்கொள்ளலாம் (பிரிவு 10). முறையாக அறிவிக்கப்பட்ட கட்டடத்தில் இயங்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் வழக்கில் சிறைக்குள் வைத்தே பல நாட்கள் விசாரணை நடைபெற்றது. அரசால் நியமிக்கப்படுகிற அந்த நீதிபதி தனது பணி ஓய்வுக் காலத்துக்குப் பிறகும் பணியில் நீடிக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவரும் அவரது சட்டத்தரணியும் இல்லையென்றாலும் வழக்கை நடத்தலாம் (பிரிவு 14(5)).

என்ன வேடிக்கை, அரசே எங்கள் மீது குற்றம் சுமத்துகிறது. அரசே - உயர் நீதிமன்றமோ, உச்ச நீதிமன்றமோ அல்ல - அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க நீதிமன்றத்தை அமைக்கிறது. நீதிபதியை நியமிக்கிறது. பின்னர் தீர்ப்புக் கிடைக்கிறது எனில், அந்தத் தீர்ப்பை எதிர்த்து எங்களால் உயர் நீதிமன்றம் செல்ல முடியாது. எங்கள் 26 பேரில் 19 பேரை விடுதலை செய்து வழங்கிய தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தால் எங்கள் எழுவருக்கும் உச்ச நீதிமன்ற மேல்முறையீட்டு வாய்ப்பில் விடுதலை கிடைத்திருக்கும் என்ற உண்மை ஒருபுறம் இருக்க, எல்லா மேல்முறையீட்டுக்கும் டில்லி செல்ல ஏழைகளால் முடியுமா?

சஞ்சய் தத் போன்ற அதீதமான செல்வாக்குக் கொண்டவர்கள் தவிர்த்து, 'தடா' சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்ட வேறு எவரது பிணை வழக்கையும் உயர் நீதிமன்றம் எடுத்துக்கொண்டதில்லை. எங்கள் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில் ஒருவர்கூட விசாரணைக்காலம் முழுமைக்கும் பிணையில் செல்ல முடியவில்லை. அதற்கான காரணத்தை ஒருமுறை என்னைச் சந்திக்க வந்த திரைப்பட இயக்குநர் அண்ணன் ஜனநாதனிடம் கூறினேன். அதைக்கேட்டு லேசாக அதிர்ந்த அவர், "இது எனக்குப் புதிய தகவலாக உள்ளது. இந்தத் தகவல் மிகுந்த வருத்தத்தைத் தருகிறது" என்றார்.

"எப்போதும் என்ன நிகழ்கிறது என்றால் ஏழைதான், ஏமாளிதான், நீக்ரோதான், கறுப்பு மனிதன்தான் தூக்கிலிடப்படுகிறான். பணம் படைத்தவன், வெள்ளைக்காரன் தப்பித்துக் கொள்கிறான். உள்ளபடியான இந்தப் பாகுபாட்டை நம்மால் சகித்துக்கொள்ள முடியாது" என தனது தீர்ப்பொன்றில் குறிப்பிட்டார் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி மார்ஷல்.




எங்கள் வழக்கில் என்ன நடந்ததென்றால், 26 பேரில் ஏறத்தாழ 20 பேர் வரை 'தடா' நீதிமன்றத்தில் வாதிட சட்டத்தரணி ஒருவரை அமர்த்தி வழக்காடும் வசதியின்றி வக்கற்றவர்களாக இருந்தோம். அதனால், அரசு செலவில் அமர்த்தித் தரும்படி நீதிமன்றத்தில் மனுசெய்து அவ்வாறு அமர்த்தப்பட்ட சட்டத்தரணிகளை நம்பியே எங்கள் எதிர்கால வாழ்வை ஒப்புவித்தோம். ஏனைய 4, 5 பேர்கூட மிகச் சாதாரண அளவில் 'தடா' நீதிமன்றத்தில் வழக்காட மட்டுமே சட்டத்தரணியை அமர்த்த முடிந்தது.

ஒரு சாதாரண உயர்நிலைப் பாடசாலை உடற்கல்வி ஆசிரியராக இருந்த எனது தந்தையின் சொற்ப ஊதியத்தை நம்பியே அன்று எனது தமக்கையின் திருமணம், தங்கையின் பொறியியல் பட்டப்படிப்பு ஆகியன காத்திருந்தன.

(வலிகள் தொடரும்)

# சிரியாவில் ஐ.எஸ்ஸிடமிருந்து மேலும் ஒரு நகரம் மீட்கப்பட்டது



சிரியா நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி வைத்திருந்த மேலும் ஒரு நகரத்தை துருக்கி படைகளின் உதவியுடன் சிரியா நாட்டின் போராளி குழுவினர் மீட்டுள்ளனர்.


துருக்கி-சிரியா எல்லைப் பகுதியில் அலெப்போ நகரை ஒட்டி, அல்பாப் பகுதியில் குவாபாசிப் என்னும் சிரியாவுக்கு சொந்தமான நகரத்தை கைப்பற்றி இருந்த ஐ.எஸ். தீவிரவாதிகள், அங்கிருந்தவாறு துருக்கி நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த முயற்சித்து வந்தனர்.

இந்த நகரத்தை மீட்பதற்காகவும், ஐ.எஸ். தீவிரவாதிகளை இங்கிருந்து விரட்டுவதற்காகவும் சிரியாவில் உள்ள அஹ்ரார் அல் ஷாம் உள்ளிட்ட உள்நாட்டு குர்திஷ் இனப்போராளிக் குழுக்கள் சமீபத்தில் அதிரடி தாக்குதலை தொடங்கின. துருக்கி இராணுவமும் அவர்களுக்கு துணையாக இருந்தது.

இந்த கூட்டுப்படையினர் நேற்று முன்தினம் பின்னிரவு, அல் பாப் பகுதியை ஒட்டியுள்ள குவாபாசிப் நகரத்தை கைப்பற்றி விட்டதாகவும், அல் பாப் பிராந்தியம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வகையில் இந்தப் படைகள் முன்னேறி வருவதாகவும், இங்கு முகாமிட்டிருந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் புறமுதுகிட்டு ஓடிவிட்டதாகவும் சிரியா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# மொசூலின் பெரும்பகுதியை வசப்படுத்தியது அரச படை

## ஆயுத தொழிற்சாலையும் கண்டுபிடிப்பு



ஈராக்கில் நிலைகொண்டுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளின் முக்கிய கோட்டையாக விளங்கும் மொசூலை கைப்பற்றும் அரச படை நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னேறி செல்லும் ஈராக்கிய துருப்புக்கள் மொசூலின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தீவிரவாதிகளின் வெடிபொருள் மற்றும் குண்டுத் தொழிற்சாலை ஒன்றை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட குறித்த தொழிற்சாலை தீவிரவாதிகளின் முக்கிய பெரிய குண்டு உற்பத்திக்கான இடமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஈராக்கிய இராணுவ பீரங்கி பயிற்றுவிப்பாளர் Muhsen Uqla கூறுகையில், 'அந்த தொழிற்சாலையை நாங்கள் கைப்பற்றும் போது அங்கே 120 மில்லி மீற்றர் அளவுள்ள 11 ஷெல் குண்டுகளை கைப்பற்றினோம் அவை இறுதித் தயாரிப்பிற்கான ஒரு இறுதிக் கட்ட மாதிரி போன்று அமைந்துள்ளன. அவை அந்த தொழிற்சாலையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன' என்று தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த தொழிற்சாலையில் கட்டமைப்பு மிகவும் விசித்திரமான ஒன்றாக காணப்பட்டதாகவும் அதனை கிடங்கு அல்லது ஆயுதக் குழி என்று விபரிப்பதை விட தொழிற்சாலை என்று கூறுவதே பொறுத்தமானது என்ற அளவிற்கு அதன் அமைப்பு காணப்பட்டதாகவும் அரச படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மொசூலின் மூன்றில் இரண்டு பகுதியை அரச படை மற்றும் அரச ஆதரவுபடைகள் இணைந்து தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதாகவும் விரைவில் மொசூலின் முழுமையான ஆதிக்கமும் படையினர் வசமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஒபாமா மனைவியை மனித குரங்கு என்று திட்டிய மேயர் இராஜினாமா!



ஒபாமாவின் மனைவியை 'மனித குரங்கு' என்று திட்டிய மேயர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல். இவர் அமெரிக்காவின் முதல் பெண்மணியாக இருக்கிறார். இவர் கறுப்பர் இனத்தை சேர்ந்தவர்.

இந்த நிலையில் இவர் மீது இனவெறி தாக்குதல் நடத்தப்பட்டது. மேற்கு விர்ஜீனியாவின் கிளே கவுண்டியின் கார்பரேஷன் வளர்ச்சி திட்ட இயக்குநராக பமீலா ராம்சே டெய்லர் இருக்கிறார்.

சமீபத்தில் இவர் 'பேஸ்புக்' இணையதளத்தில் ட்ரம்பின் வெற்றிக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தார். அத்துடன் மிச்செலிட ஒபாமாவை 'வெள்ளை மாளிகையில் அழகான நவநாகரிக முதல் பெண்மணி இருக்கிறார் என்று கூறிய அவர் பார்ப்பதற்கு குதிக்கால் செருப்பு அணிந்த மனித குரங்கு போன்று இருக்கிறார் என திட்டி இருந்தார்.

அவரின் இந்த கருத்தை கிளே கவுண்டியின் மேயர் பிவர்லி வாலிங்கும் ஆதரித்து இருந்தார். இவர் ஊழலில் குற்றம் சாட்டப்பட்டவர் ஆவார்.

இவர்கள் இருவரின் இத்தகைய இனவெறி தாக்குதலுக்கு அமெரிக்காவில் கடும் கண்டனமும் எதிர்ப்பும் எழுந்துள்ளது. அதைத் தொடர்ந்து பேஸ்புக்கில் மிச்செலை திட்டி எழுதப்பட்ட வாசகத்தை பமீலா நீக்கிவிட்டார்.

மேலும் தான் அவர் மீது இனவெறி தாக்குதல் தொடுக்கவில்லை. வெள்ளை மாளிகையில் ஏற்பட்ட மாற்றம் குறித்து கூறியிருந்தேன். எனது கருத்துக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஒரு போதும் நான் இனவெறியில் அப்படி கூறவில்லை என தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே இனவெறி தாக்குதலில் ஈடுபட்ட இவர்கள் இருவரையும் பணிநீக்கம் செய்ய வேண்டும் என 85 ஆயிரம் பேர் கையெழுத்தீட்டு மனு அனுப்பியுள்ளனர். இதையடுத்து, பிவர்லி வாலிங், கிளே கவுண்டியின் மேயர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார். (இ-7)

# முன்னாள் ஜனாதிபதியின் மரண தண்டனை இரத்து

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மொர்சிக்கு, சிறை உடைப்பு தொடர்பான வழக்கில் குற்றவியல் நீதிமன்று விதித்த மரண தண்டனையை, அந்நாட்டு தலைமை நீதிமன்று ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒன்றான எகிப்தில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக் தலைமையிலான அரசுக்கு எதிராக, 2012இல் பயங்கர கலவரம் வெடித்தது.

முகமது மொர்சி தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவ கட்சியினர், பொது மக்கள் ஆதரவுடன் நடத்திய போராட்டத்தில், ஆட்சியிலிருந்து முபாரக் கவிழ்க்கப்பட்டார் மொர்சி ஜனாதிபதியானார்.

மரண தண்டனை


அதற்குப் பின் நடைபெற்ற, மொர்சி அரசுக்கு எதிரான போராட்டத்தில், 2013ல், ஆட்சியை இழந்த மொர்சி மற்றும் அவரது அரசின் அமைச்சர்கள் சிறையில் தள்ளப்பட்டு உள்ளனர்.

ஏராளமான குற்றச்சாட்டுகளின் படி, 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மொர்சிமீது, 2012ல், சிறைகளை உடைத்து, கைதிகளை விடுவித்த வழக்கில், மொர்சி மற்றும் அவரின் ஆதரவாளர்கள், 130 பேருக்கும் மரண தண்டனை விதித்து, குற்றவியல் நீதிமன்றில் உத்தரவிட்டது. இதனை எதிர்த்து எகிப்தின் தலைமை நீதிமன்றில் மொர்சி சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த தலைமை நீதிமன்று மொர்சிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்து உத்தரவிட்டது. மேலும் இவ் வழக்கின் விசாரணையை மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்கவும் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# ட்ரம்ப் மாறாவிட்டால் அவருக்கு பிரச்சினை

## ஒபாமா அறிவுறுத்து



"அமெரிக்கா ஜனாதிபதியாக பதவி ஏற்க உள்ள ட்ரம்ப், தனது குணங்களை மாற்றிக் கொள்ள வேண்டும், "என ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவுறுத்தியுள்ளார்.

ட்ரம்ப் மாறாவிட்டால் அதுவே அவருக்கு பிரச்சினையாகி விடும். வேட்பாளராக அவர் கூறிய கருத்தை, ஜனாதிபதியான பின்பு கூறும் போது அதன் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த விடயத்தில் ட்ரம்ப் கவனமாக இருக்க வேண்டும்.

பெரும் முயற்சிக்கு பின் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம், பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் ஏற்பட்டன. இந்த ஒப்பந்தங்களுக்கு எதிராக செயற்பட்டால், பெரிய பாதிப்பு ஏற்படும். ட்ரம்ப் ஜனாதிபதியாக பொறுப்பேற்கும் போது, தன் குழுவில் சிறந்த நபர்களையே தேர்வு செய்ய வேண்டும். அந்த குழுவின் செயற்பாடுகள் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யார் அமெரிக்காவின் ஜனாதிபதியானாலும் எங்களுக்கு கவலையில்லை

## வடகொரிய பிரதிநிதி அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனாதிபதியாக யார் பொறுப் பேற்றாலும் எங்களுக்கு கவலை இல்லை, ஆனால், எங்களுக்கு எதிரான தீண்டாமையை அமெரிக்கா மாற்றிக் கொள்ளுமா? என்பது தான் தலையாயப் பிரச்சினை என வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா நாட்டின் பிரதிநிதி கிம் யாங் ஹோ-விடம் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த அவர், 'அமெரிக்காவின் ஜனாதிபதியாக யார் பொறுப்பேற்றாலும் எங்களுக்கு கவலை இல்லை, ஆனால், எங்களுக்கு எதிரான தீண்டாமை மனப்போக்கை மாற்றிக்கொள்ளும் அரசியல் நிலைப்பாட்டை அமெரிக்கா மாற்றிக் கொள்ளுமா? இல்லையா என்பதுதான் தலையாய பிரச்சினை என தெரிவித்துள்ளார். (இ-10)

## ரூ.13 கோடி இலஞ்சம் வாங்கிய

# ரஷ்ய அமைச்சர் அதிரடிக் கைது

## புலனாய்வுத்துறை விசாரணை



எண்ணெய் நிறுவன ஒப்பந்தத்திற்கு அனுமதி வழங்க, 13 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதற்காக, ரஷ்ய பொருளாதார அமைச்சர் அலெக்சிஸ் உல்யுகாயேவ் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஷ்ய நாட்டின் பொருளாதார அமைச்சர், அலெக்சிஸ் உல்யுகாயேவ். எண்ணெய் நிறுவன ஒப்பந்தம் குறித்த அனுமதி வழங்க, தனியார் நிறுவனத்திடம், 13 கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியதாக, அலெக்சிஸ் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது குறித்து விசாரித்த புலனாய்வு அதிகாரிகள், அவர் மீதான குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருப்பதாக தெரிவித்து உள்ளனர்.

இதையடுத்து, அலெக்சிஸ் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு உள்ளன. இந்த விவகாரம் குறித்து, விரிவான விசாரணை நடத்த வேண்டும் என, எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பியுள்ளன. (இ-7)

# ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் அழித்து ரத்தக்களரியை ஏற்படுத்துவேன்



## ஞானசார தேரர் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

***முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக அழித்து மாபெரும் ரத்தக் களரியை ஏற்படுத்தப் போவதாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் கடுமையாக எச்சரித்துள்ளார்.***

முஸ்லிம்களுக்கு எதிரான தீவிர இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வந்த டான் பிரியசாத் எனப்படும் போதைப்பொருள் வர்த்தகர் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரது இனவாதக் கருத்துக்கள் தொடர்பில் முஸ்லிம் கட்சியொன்றின் தலைவரும் தமிழ் அரசியல் கட்சியொன்றின் தலைவருமான இரண்டு அமைச்சர்கள் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கை காரணமாகவே டான் பிரியசாத் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் டான் பிரியசாத்தின் கைது நடவடிக்கை குறித்து பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கடுமையாக கொந்தளித்துள்ளார்.

தௌஹீத் ஜமா அத்தின் பொதுச்செயலாளர் அப்துர் ராசிக்கை கைது செய்யத் தவறும் பட்சத்தில் மாளிகாவத்தை தொடக்கம் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் அழித்து பெரும் ரத்தக் களரியொன்றை ஏற்படுத்த உள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நாடெங்கிலும் இருந்து சிங்கள இளைஞர்கள் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கிருலப்பனையிலுள்ள பொதுபல சேனா தலைமையகத்தை நோக்கி வரத் தொடங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னிரவு தொடக்கம் ஏராளமான வெளி மாவட்ட இளைஞர்கள் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

ஏதேனும் அசம்பாவிதம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவர்கள் கொழும்புக்கு வருகை தந்திருப்பதாக தெரியவருகிறது. (இ-7-10)

# இலங்கைக்கு வந்த அரிய வகை பறவை





வெளிநாடு ஒன்றிலிருந்து அரிய் வகை பறவையொன்று இலங்கைக்கு வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பறவை கொழும்பு, திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் கீழே விழுந்து கிடந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

காயமடைந்த பறவையை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்கியுள்ளதாக பேராசிரியர் சம்பத் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது நல்ல உடல் நிலையில் பறவை உள்ளதாகவும், நுகேகொடையில் உள்ள ஈர நிலத்தில் இந்த பறவை விடுவிக்கப்படவுள்ளது. இந்த பறவை தென்கிழக்கு ஆசியாவில் இருந்து வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். Malayan night heron என இந்த பறவை இனம் அழைக்கப்படுகின்றது.

குறித்த பறவை இனத்திற்கு கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் சாதகமான சூழல் காணப்படுவதால் இலங்கை வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இலங்கை புலனாய்வு தலைவரை ஐ.நா.குழு விசாரிக்க வேண்டும்

## ஊடக அமைப்புக்கள் கோரிக்கை



ஜெனிவாவில் நடைபெறும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் 59 ஆவது கூட்டத்தொடரில், இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ், இலங்கையின் சார்பில் பங்கேற்பது குறித்து ஆர்.எஸ்.எவ் எனப்படும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பும், ஜேடிஎஸ் எனப்படும் இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இந்த இரண்டு அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இலங்கையில் உள்நாட்டு போரின் இறுதிக் கட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மோசமான குற்றங்கள் இழைத்ததாக குற்றம்சாட்டப்படும், தேசிய புலனாய்வு பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ், ஜெனிவாவில் நடக்கும் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா.குழு கூட்டத்தில், இலங்கை குழுவில் இடம்பெற்றிருக்கிறார் என்பது ஏமாற்றத்தைத் தருகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில், 2008 மார்ச் தொடக்கம், 2009 ஜூன் வரையான காலப்பகுதியில், பிரதி பொலிஸ்மா அதிபர் மெண்டிசின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத தடுப்பு பிரிவு என இரண்டு பிரிவுகள் இருந்தன.

மெண்டிஸ் தலைமை தாங்கிய காலப்பகுதியில், இந்த இரண்டு பிரிவுகளும், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டதாக ஐ.நா.விசாரணை ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மெண்டிசின் தலைமையின் கீழ் இருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத தடுப்பு பிரிவு என்பனவற்றினால், பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் கடத்திச் செல்லப்பட்டும், கைது செய்யப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் உள்ளனர்.

தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடினர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டு மோசமாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர்களில், ஜே.எஸ். திசநாயகம், ஜசிகரன், அவரது மனைவி வளர்மதி, கே.விஜேசிங்க ஆகியோரும் அடங்குவர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத தடுப்பு பிரிவு ஆகியவற்றினால், மேற்கொள்ளப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான மீறல்களுக்கு பொறுப்பாக இருந்த சிசிர மெண்டிசிடம், சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு கேள்விகளை எழுப்ப வேண்டும்.

தனது கண்காணிப்பில் இருந்த இந்த பிரிவுகளால் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, ஏதும் தெரியாது என்றும் சிசிர மெண்டிசினால் மறுக்க முடியாது.

ஏனென்றால், தடுப்பில் இருந்த போது மோசமாக நடத்தப்பட்டவர்கள் தொடர்பான நம்பகமான சான்றுகள் எம்மிடம் உள்ளன” என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7-10)

# வடக்கு,கிழக்கு முன்னாள் ஆளுநர்கள் எழுதிய நூலை வெளியிட்டார் மகிந்த



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆளுநர்களாக இருந்த முன்னாள் படை அதிகாரிகள் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம ஆகியோர் இணைந்து எழுதிய நூலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் வெளியிட்டு வைத்தார்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம ஆகியோர் இணைந்து எழுதிய “குழப்பநிலை மற்றும் உறுதிநிலை- வட-கிழக்கு இலங்கைப் போருக்குப் பிந்திய அபிவி ருத்தியும், நல்லிணக்கமும் (“Conflict & Stability” – post war development and reconciliation in NE Sri Lanka) என்ற தலைப்பிலான இந்த நூலின் வெளியீட்டு விழா ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது.

போருக்குப் பின்னர், வடக்கிலும், கிழக்கிலும் முன்னெடுக்கப்பட்ட புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, அந்தக் காலகட்டத்தில் வடக்கின் ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும், கிழக்கின் ஆளுநராக இருந்த றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரமவும் இணைந்து இந்த நூலை எழுதியுள்ளனர். (இ)

# அரச சேவையாளர்கள் 280 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள்

அரச சேவையாளர்கள் 280 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படுவதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட அலுவலகப் பணியாளர்களும் இதில் அடங்குவதாக அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.


அநேகமாக விசாரணைகள், காலம் கடந்து முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வித் துறையில் சேவையாற்றுபவர்களிடையே அதிகமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரச சேவை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

# வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமை

## சர்வதேசம் கண்டுகொள்ளவில்லை கோத்தபாய ராஜபக்ஷ கவலை



(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொடுக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் வரவேற்கவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரியர் எட்மிரல் மொஹான் விஜேவிக்ரம மற்றும் வடமாகாண முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி. ஆகியோர் இணைந்து எழுதியிருந்த "குழப்பநிலை மற்றும் ஸ்திரத்தன்மை" என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ,

வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி அந்த மக்களுக்கு ஜனநாயக உரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருந்தார். யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செயது, அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ததுவதற்காக பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததாகவும அவா தெரிவித்தார். (இ-7-10)

### ஜனவரி 8 இற்கு எதிரான

# சவால்களை வெற்றி கொள்வதற்கான மனோதிடம் என்னிடம் இருக்கின்றது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

மோசடியாளர்களைச் சுற்றி மட்டுமன்றி நல்லதொரு நாட்டுக்கான எமது குறிக்கோள்களைச் சுற்றியும் தடைகள் சூழ்ந்திருந்த போதிலும், அவையனைத்தையும் வெற்றி கொள்வதற்கான மனோதிடம் தன்னிடமிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ராவய பத்திரிகையின் 30 ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அறிஞர்கள் கருத்தாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராவய உட்பட்ட ஊடகங்களின் விமர்சனங்களுக்கு தான் தொடர்ச்சியாக முகங்கொடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி அனைவரினதும் மரியாதைக்கும் நம்பிக்கைக்குமுரிய அழகிய நாட்டைக் காண்பதே தனது குறிக்கோளாகுமெனவும் அந்த குறிக்கோளை அடைவதற்கான பயணத்தில் ஒத்தாசையுடனும் புரிந்துணர்வுடனும் பயணித்தால் அப்பயணம் மிக இலகுவானதாக அமையுமெனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின தலைமைப் பதவியை தான் பொறுப்பேற்றது நீண்ட கால நண்பர்கள் பலரின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானதாகவும் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுதல் உட்பட்ட நல்லாட்சி அரசின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றுவதற்கு அதன்மூலம் கிடைத்த ஒத்துழைப்பை குறைத்து மதிப்பிட முடியாதெனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பலமுள்ளதாக இருந்த நிலையிலேயே ஜனவரி 8 வெற்றிக்கு பின்னர் 100 நாள் வேலைத்திட்டம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி, அந்த சவாலை வெற்றி கொள்வதற்காக தனது கட்சித் தலைமைப் பதவி உறுதுணையாக இருந்ததனையும் மறக்கக்கூடாதெனவும் தெரிவித்தார்.



தேசிய பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவர்கள் முன்னாள் தலைவரின் திட்டமிட்ட பிரசாரங்கள் காரணமாகவே தோல்வியடைந்த தாகவும், 100 நாள் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் தொடர் நடவடிக்கைகளுக்கும் கட்சியின் நம்பகமான அணியொன்று தன்னை சுற்றியிருப்பது இன்றியமையாததெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி பலி; மூன்று பேர் காயம், விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

குருநாகலில் நேற்றுமுனதினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் - ரத்தரவூவ இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரத்தரவூவ பகுதியில் உள்ள ஹோட்டலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அடையாளம் தெரியாத கார் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போது, காருக்குள் இருந்த இருவரால் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தின் போது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளது டன் மேலும் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்த நிலையில் குருநாகல் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன், குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## வேண்டியவர்களும் வேண்டாதவர்களும்

நியாயம்பேசும் முன்வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் பாகுபாடு இருக்கக்கூடாது என்பது மிக முக்கியம். சிலரோ வேண்டியவர்கள் என்றால் அவர்கள் செய்ததெல்லாம் சரி! வேண்டாதவர்கள் என்றால் அவர்கள் செய்வதெல்லாம் தவறு என்கிற பாணியிலேயே அணுகுவார்கள்.

வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் பாகுபாட்டில் ஓர் அர்த்தம் இருக்க வேண்டும். வேண்டாதவர்கள் என்றால் அவர்கள் ஏன் வேண்டாதவர்கள் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அர்த்தமின்றிப் பலபேரை அந்தப்பட்டியலில் சேர்த்துவிடக்கூடாது.

இன்னொன்று,

எந்த நேரத்தில் நாம் வேண்டியவர்கள் என நினைத்துக் கொண்டிருப்பவர்கள் நம் கழுத்தை அறுப்பார்கள். எந்த நேரத்தில் நாம் வேண்டாதவர்கள் என எண்ணிக் கொண்டிருப்பவர்கள் நமக்கு எதிர்பாராத விதமாக உதவி நமக்கு மிகமிக வேண்டியவர்களாவார்கள் என்பதையெல்லாம் நாம் கணிக்க இயலாதவர்களாக இருக்கிறோம்.

எனவே இந்தப் பாகுபாட்டை எச்சரிக்கை மிக்க அளவுகோலுடன் செய்வது நல்லது.

வேண்டாதவர்கள் என நாம் எண்ணிக் கொண்டிருப்பவர்களை மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டியிருக்கிறது. ஏன் தெரியுமா? நம்மை வேண்டாதவர் என்று இவர் நினைக்கிறார் என்பது மற்றவர்களுக்குத் தெரிவது நல்லதல்ல. இவர்களிடத்தில் நாம் அணுகும் எந்த ஒரு காரியமும் கெட்டுக்குட்டிச்சுவரான மாதிரித்தான். நம்மை இந்த ஆள் வேண்டியவர் பட்டியலில் வைத்திருக்கிறாரா? வேண்டாதவர் பட்டியலில் வைத்திருக்கிறாரா? என்று தெளிவான முடிவுக்கு வரமுடியாத நிலையில்தான் இத்தகையவர்களை வைத்திருக்க வேண்டும்.

ஏன் தெரியுமா? வேண்டாதவர்கள் என்று நாம் காண்பித்துக் கொண்டால் அவர்கள் எதிரிகள் என்னும் அடுத்த உயர்ந்த பதவிக்குப் போய் விடுகிறார்கள். வந்தது வினை!

நம்மிடமும் சில குறைகளும் பலவீனங்களும் உண்டு. இவையெல்லாம் நாமே உருவாக்கிய இந்த எதிரிகள் மூலம் வெளியாகிவிடக்கூடும். மேலும் எதிரிகள் என்று சிலரை வளர்த்துக்கொண்டால் நாம் வளர முடியாது. இவர்களுடன் போராடவே நேரம் சரியாக இருக்கும். இது தேவைதானா?

பிடித்தவர்களை எந்த அளவிற்குப் பிடித்தவர்கள் என்று எவ்வளவு எல்லையை மீறிச் சென்றும் காட்டிக் கொள்ளலாம். ஆனால் பிடிக்காதவர்களை அப்படி வெளியே காட்டிக்கொள்ளாதிருப்பது உத்தமம்.

மேலும் பிடிக்காதவர்கள் என்ற பிரிவினரைக் குறைத்துக்கொள்வது நமக்கு மிக மிக நல்லது.

லேனாதமிழ்வாணன்

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

# மாதிரி வினாத்தாள்

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
பகுதி -II வினாக்கள்

2 மணித்தியாலம்

நேற்றைய தொடர்ச்சி...

7) I. 2016.02.10 ஆம் திகதி சனூதி வணிகம் தமது வணிகப் பயன்பாட்டுக்காக ரூ 20000 பெறுமதியான உபகரணங்கள் சில்வா நிறுவனத்திடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கலை மூல ஏட்டில் பதிவு செய்க.

II. 2014.12.31 இல் சுமுது வணிகத்தின் கீழ் தரப்பட்ட மீதிகளைக் கொண்டு பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | ரூ |
|---|---|
| கொள்வனவு | 20000 |
| விற்பனை | 60000 |
| கடன்பட்டோர் | 12000 |
| கடன்கொடுத்தோர் | 20000 |
| சம்பளம் | 15000 |
| இயந்திரம் | 50000 |
| பற்று | 5000 |
| மூலதனம் | 22000 |

III. 2016 ஜனவரி 31 இல் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ 25000 ஆகும். அத்தினத்தில் வங்கிக் கூற்று மீதியானது பின்வரும் காரணங்களால் வேறு மீதியைக் காட்டியது.

1.வழங்கப்பட்டு இதுவரை சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 5000.
2.வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 12000
3.வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ 2000.
4.நிலையியற் கட்டளையினடிப்படையில் செலுத்திய காப்புறுதி ரூ.8000.
5. நேரடி வைப்பு ரூ 10000

மேற்படி தகவல்களைக் கொண்டு வங்கிக் கணக்கைத் திருத்தி, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

IV. கீழ் தரப்பட்ட கணக்கீட்டு வழுக்களைத் திருத்துவதற்கான பொதுக் குறிப்பேட்டினைத் தயாரிக்குக.

1.ரூ 1000 பெறுமதியான விற்பனைப் பட்டியலுக்கான பதிவுகள் கணக்கேடுகளில் முற்றாக பதியப்படாமல் விடப்பட்டிருந்தது.
2. ரூ 15000 சம்பளம் செலுத்தியது காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
3.ரூ 8000 பெறுமதியான தளபாடக் கொள்வனவு தளபாடத் திருத்தக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
4. ரூ 7000 கடன் கொள்வனவானது இரு கணக்குகளிலும் செலவில் பதியப்பட்டுள்ளது

# G.C.E. (O/L) Model Paper - 2016

## English Language I — One Hour

Important : * Answer all questions on this paper itself.

**Test 1**

Fill in the blanks in the following advertisement. Use the words given in the box. Write the correct letter in the blank. The first one is done for you.

(a) lessons (b) starting (c) school (d) details (e) ~~course~~ (f) director

**LIKE TO BE A PHOTOGRAPHER?**

**JOIN NOW!**

- Three-month certifcate (1) ........e........ on photography for (2) ...................... leavers.
- Classes (3)......................on Saturday 28th December 2016 at 9a.m.
- (4)..................... conducted by Mr.G.A. Fernando, (5).....................,Royal School of Photography, Sri Lanka.
- Course fee - Rs. 15,000/-
- For (6)..................... contact -3132527



**Test 2**

Read the following dialogue and fill in the blanks. Use the words given in the box. There is one extra word. The first one is done for you.

into, from, for, on, of, along, ~~to~~

Sumudu : Excuse me, could you tell me the way (1) .....to..... the library, please?
Amitha : Yes, go (2) .............. this road until you come to a set (3) .............. traffic lights.
Sumudu : OK. After that?
Amitha : Then, turn left (4) .............. Vajira Road. The library is the first building (5) .............. the left.
Sumudu : Thanks. Is it far (6) .............. here?
Amitha : No, it'll take only a few minutes.

**Test 3**

Study the picture and fill in the blanks in the text given below with suitable words.



This is a picture of a park. Many people are relaxing there. The(1) ............ is shining and some (2)................... are flying in the (3)............... Four (4) ................ are dancing in a circle. They are holding their (5) ................ Two boys are on the two (6)............ while some others are playing with a (7).............. An old man is walking with his (8) ..............along the path. He is carrying a walking (9)............... in his hand. There are some tall (10) ...................in the background.

**Test 4**

Here are some entries from Shani's diary with the comments she made. Match the entries with the comments by writing the relevant letter in the space provided. The first one is done for you.

**Diary Entries**

Saturday 2nd May
1. I went to see a comedy film with my parents. ....e......

Sunday 3rd May
2. I spilt my fathers's coffee in the morning. ................

Monday 4th May
3. I heard on the news that the scientists at NASA are doing experiments to send a man to Mars. ................

Tuesday 5th May
4. The teacher asked me to rewrite the essay. ................

Wednesday 6th May
5. I spent the whole evening practising netball. ...............

Thursday 7th May
6. My mother was worried because I got home late today. ................

**Comments**

a. I played really hard. It was tiring but fun.
b. I browsed the internent to find more about the planet.
c. It wasn't my fault. The bus br oke down on the way home.
d. I wish I had checked grammar and spelling in it.
e. It was so funny and we had a good laugh.
f. Some important papers got wet and I was very upset.

**Test 5**

Match the following advertisements with the requirements of the people. Write the relevant number of the advertisement in the box provided. The first one is done for you.

Advertisements

| | |
|---|---|
| (1) Newly built modern house, 2 bedrooms, calm and quiet surrounding. 24, Temple Road, Kelaniya. Call : 3282847 | (2) A house with 5 bedrooms, 4 bathrooms, ample parking space, big garden Rs - 7.3 million Call : 0521234 |
| (3) Attractive land blocks with all facilities. Bank loans and easy payment terms available. Call : 424635 | (4) Two roomed house with furniture, hot water and two attached bathrooms. For genuine buyers only. Call : 0667235 |

(see page 16)

| | |
|---|---|
| (5) A house within 5 minutes' walking distance to 177 & 190 main bus route. No Brokers. Can see by appointments only. Call : 022 1654 | (6) A block of land facing carpeted road. 15.5 perches suitable for business.Rs. 150, 000 per perch Call : 012 3947 |

Requirements

a) You are looking for quick access to public transport.
b) Your parents are looking for a beautiful place to build a house.
c) Mr. Rizvi who has three cars and a van is looking for a house.
d) Mrs. Mendis is looking for a house with tables, chairs, and other fittings.
e) Mr. Gamage, a university lecturer, would like to live in a peaceful neighbour hood.
f) A reputed bank is looking for a place to build a new branch. ?

**Test 6**

You saw the following notice on the school noticeboard.

**Notice**

There will be a meeting for the students who have applied for Junior Prefectship at 10.30 a.m. on Monday the 3rd, December in the school main hall, to make them aware of the interview procedure.

Mrs P. Vijayani
Teacher-in-Charge
Junior Prefects' Board

Your friend who has applied for Junior Prefectship is absent from school. Write a note asking him/her to attend the meeting mentioned in the notice. Use about 40 - 50 words.
Include the following.
date
time
venue
purpose of the meeting

.................................................................................
.................................................................................
.................................................................................

**Test 7**

Read the following text and answer the questions given.

Many folk stories are hundreds or even thousands of years old and the same stories can be found in many different parts of the world. 'Beauty and the Beast' was told in classical Greece and ancient India ; the story 'Hansel and Gretel' has been found in the West Indies, in African villages, and among the American Indians. The story of 'Cinderella' was told in China, by the Arabs and the Zuni Indians. Many were not written down until the Frenchman Perrault and the Grimm brothers from Germany collected the stories and published them. They were not only for children ; the whole family used to sit round the fire to listen to the story teller.

The stories often begin with a family situation - 'Once upon a time there was a poor woodcutter who lived near the forest with his wife and two children.' The endings are often alike too: 'so they were married and lived happily ever after.' Also in the stories the hero is usually handsome and the heroine is often beautiful.

Folk tales usually deal with feelings and experiences. Some of them are love, courage, jealousy and revenge. Therefore, these stories prepare children to face the real world. They teach children that in order to succeed in the world, you need to be skilful, determined, intelligent, brave and good.

1. Underline the correct answer :
The story that was told in Greece and ancient India was ...
(a) Hansel and Gretel (b) Beauty and the Beast (c) Cinderella
2. Who told the story 'Cinderella' in China?
a) .................................................................................
b) .................................................................................
3. Where did the whole family usually gather to listen to the stories?
.................................................................................
4. According to the passage, how do the stories often start?
.................................................................................
5. What are folk tales generally about?
.................................................................................

**Test 8**

Write a paragraph on one of the given topics. Use about 50 - 60 words.
• Let's protect public places.
• The day I enjoyed most.
.................................................................................
.................................................................................

.................................................................................
.................................................................................

# G.C.E. (O/L) Model Paper - 2016

**English Language II** Two Hours

Important : * Answer all questions on this paper itself. ?

**Test 9**

The following sentences are taken from a paragraph on peanuts, written by a student. There is a mistake in each sentence. Rewrite the sentences correcting the mistake. The first one is done for you.

**Peanuts**

Peanuts, also known as groundnuts, are a popular snack around the world. Peanuts are not actually nuts but they are really the seeds of the peanut plant. Peanuts are grow in many countries.

1. Peanuts are grown in many countries.
.................................................................................
2. Argentina and Brazil are two of they.
.................................................................................
3. The nutritional value of peanuts are very high.
.................................................................................
4. They contains many vitamins and minerals.
.................................................................................
5. Peanut butter is popular in some country.
.................................................................................
6. Peanuts are also a important source of cooking oil.
.................................................................................

**Test 10**

Read the following text and fill in the blanks with suitable words given in the box. There are two extra words.

a, an, all, at, available, animals, giving, hundred, include, locals, major, over, other, project, will, wildlife

**Animal Park**

For the first time in South Asia, a 500-acre animal park is being designed in Hambanthota. The idea is to let the animals wander freely while the visitors get a good view not only in daytime but also in the night. Government hopes to invest five (1) ........................... million rupees for this (2) ........................., which will be a (3) .............. tourist attraction for both (4) ........................... and tourists. The park (5)...... ............... be open for visitors (6) ........................... the experience of exploring (7) ........... in a tropical jungle (8)........... ................. night. The park will (9) .............. African lions and many (10) ............... species that are not (11)........... ............... in Yala Park. The (12) ........................ will roam freely while (13) ........................ visitors will be caged. (14)........................ electrical wire will be installed for the safety of the visitors. This will be a good resting point for pilgrims to Kataragama.

**Test 11**

Select a word from the box which has a similar meaning to the phrases given within brackets and write it in the space given. There are three extra words. The first one is done for you.


| | | | |
|---|---|---|---|
| **resist** | **escape** | **common** | **persuasion** |
| **attract** | **favourite** | **mental** | **abundance** |
| **consumers** | | | |

**Advertisements**

No one can pretend to remain un affected by advertisements. It is impossible to turn a blind eye to the (1) ...persuasion...(causing people to believe something) caused by advertisements to buy various types of products that fill our streets, newspapers, and magazines. Even in the sanctity of our living room, advertisers are ready to pounce on us as we tune in to our (2) ............................ (most enjoyed) radio or television programmes. In time, no matter how hard we (3) ............................ (try to remain strong against), clever little tunes and catchy phrases of the advertisements seep into our subconscious minds and stay there, sometimes persuading us to buy something that we actually do not need. Though they seem so varied, all these advertisements have one thing in (4) ............................ (shared by two or more groups): they make strong appeals to our emotions. The impact of advertisements on (5) ............................ (people who buy goods and services) is so huge that no one can (6) ............ (get away from something) it. When a crunchy, honey-filled chocolate bar stares up at you from a glossy page, what else can you do but rush out and buy one?

(Tomorrow will be published)

# குறைந்த வருமானம் ரூ.40,000



"குறைந்த சம்பளம் வழங்கும் பொருளாதாரத்திலிருந்து நாம் விலகிச் செல்ல வேண்டும். ஆகக் குறைந்த சம்பளம் 40 ஆயிரமாகக் காணப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அறிவு அதிகரிக்கும் அளவுக்கு, சம்பளமும் அதிகரிக்கப்படல் வேண்டும். கல்வித் துறையின் மாற்றம், அதனை இலக்காகக் கொண்டதாகவே அமைந்துள்ளது" என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"நல்ல நாடொன்றை உருவாக்க வேண்டுமாயின், பொருளாதாரமும் அரசியலமைப்பும் மாத்திரம் போதுமானதன்று. எதிர்கால சந்ததியினருக்கான நல்ல கல்வித் திட்டமொன்று, அந்த நாட்டில் காணப்பட வேண்டும். நம் நாட்டுக் கல்வித் திட்ட அபிவிருத்திக்காக, பாரிய நிதியை ஒதுக்கீடு செய்வோம்" என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பு 12, அல் ஹுஸைன் கல்லூரியில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம், இலங்கையின் கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. எமது புதிய கல்வி அபிவிருத்தித் திட்டங்களுக்கமைய, தற்போது நிலவும் கல்வித் திட்டத்திலும் பார்க்க உயர் நவீனத்துவம் கொண்ட கல்வித் திட்டமொன்று, எமது மாணவர் சமுதாயத்துக்குப் பெற்றுக் கொடுக்கப்படும்" என்றார். "எமக்கு கிடைத்ததை விட சிறந்ததோர் எதிர்காலத்தை, எமது இளைஞர் சமுதாயத்துக்குப் பெற்றுக்கொடுப்பதே, எமது பிரதான இலக்காகும். தற்காலத்தில், தொலைபேசிகள், ஐபாட் போன்ற தொழில்நுட்பக் கருவிகள், பயன்பாட்டில் உள்ளன. தொழில்நுட்பத்துடன் சேர்த்து, எமது பொருளாதாரத்தையும் நாம் மேம்படுத்த வேண்டும். அதற்கான நாம், புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# 'ஒருநாள் ஒரு நிமிடம் வேகத்தை தணிப்போம்'

## யாழில் விழிப்புணர்வு நிகழ்வு

''ஒருநாள் ஒரு நிமிடம் வேகத்தைத் தணிப்போம்'' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுசெயற்பாடுஒன்று இன்றையதினம்யாழ்நகர்ப்பகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளில்காலை7.30மணிதொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த விழிப்புணர்வு செயற்பாடானது இன்றையதினம் காலை 7.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம்,மாம்பழம் சந்தி,யாழ். மாவட்டச்செயலக முன்றல், நல்லூர் பின்வீதி, முத்திரைச் சந்தி மற்றும் நாவலர் வீதி சந்திகளில் முன்னெடுக்கப் படவுள்ளது.

மேற்குறித்த பகுதிகளில் போக்குவரத்து பொலிஸார், பாடசாலைமாணவர்கள், ஆசிரியர்கள்,கலாசார மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு வீதியால் பயணிக்கும் வாகனங்களை ஒரு நிமிடம் மறித்து சாரதிகளுக்கு ஒரு விழிப்புணர்வு செய்தியை கூறி ஸ்ரிக்கர் ஒட்டப்படும். அத்துடன் பிரயாணிகளுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம்விநியோகிக்கப்படவுள்ளது.

குறித்தவிழிப்புணர்வுசெயற்பாட்டுக்கு அனைத்து பொது மக்களும் ஆதரவு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-9)


# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:58செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் சுவிஸ்<br>தொ.இ: B/6464 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 75செவ் 7 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/2402 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6465 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 52சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்BA/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/2408 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 38<br>உயரம்: 5'<br>தகைமைதொழில்A/Lஅவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6466 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 11செவ் 2 இல்<br>உயரம்: 5'3'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2412 |
| பிறப்பு: 1991NON RC<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பிரான்ஸ்<br>தொ.இ: B/6467 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 18செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/2422 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 901

Search for people, places and things Nagendram Home


**நிமா**



உங்களை நீங்களே கேளுங்கள், வாழ்க்கையில் உங்களுக்கு உண்மையில் என்ன வேண்டும்? அந்த திசை நோக்கித்தான் நீங்கள் பயணிக்கவேண்டும்.


**அகில்**

"மனிதப் போலிகள் வாழும் இவ்வுலகில் மனசாட்சி உள்ள மனிதன் அரிதாகிப்போனான்"
http//www.facebook.com/vyramuthu.atputhan



**ராஜ்**

கோழியும் பன்றியும் காதலித்தன.
ஒருநாள் இரண்டும் முத்தமிட்டன.
இதன் விளைவாக கோழிக்கு பன்றிகாய்ச்சல்.
பன்றிக்கு பறவைகாய்ச்சல்.
இறுதியில் இரண்டும் இறந்துவிட்டன.
முடிவு : பொருந்தாக்காதல் அழிவில் முடியும்



**டிஷானி**

டீச்சர்- உங்க அப்பாக்கு வயசு என்ன?
பையன்-ஆறு வயசாச்சு மிஸ்.
டீச்சர்-ஆறு வயசா..? என்னடா உளறுற..



பையன்-நான் பிறந்த பிறகுதானே அவரு அப்பா ஆனாரு..? 😂😂😂😂😂


**விமல்**

GIRLSக்கு சைலன்டா இருக்கறவன விட சீன் போடறவன தான் பிடிக்கும்...



BOYSக்கு சீன் போடறவள விட சைலன்டா இருக்கறவள தான் பிடிக்கும்...

**தாசன்**



சிரிப்பவர்கள் எல்லோரும்
கவலை இன்றி
வாழ்பவர்கள் இல்லை
கவலைகளை
ம(றை)றக்க
கற்றுக் கொண்டவர்கள்

tamilfbphotos.blogspot.com

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜெனிவாவில் ஐ.நா. குழுவின் விசாரணைகளால் திணறிய இலங்கைப் பிரதிநிதிகள்




இலங்கை இராணுவம், பொலிஸாரினால் இழைக்கப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள், பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றாக உருவாக்கப்படும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் உள்ளடக்கம் குறித்து இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் நேற்று முன்தினம் கடுமையான கேள்விகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் 59 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை தொடர்பான இரண்டு நாள் மீளாய்வு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் நடந்த இந்த மீளாய்வுக் கூட்டத்திலேயே இலங்கை குழுவிடம், ஐ.நா. நிபுணர்களால் சரமாரியான கேள்விகள் எழுப்பப்பட்டன.

பலஸ் வில்சனில் நேற்று முன்தினம் நடந்த மூன்று மணிநேர அமர்வில், ஆட்கடத்தல்கள், இரகசிய தடுப்பு முகாம்கள், தடுப்புக்காவல் சித்திரவதைகள், தடுப்புக் காவல் மரணங்கள், ஏனைய மனித உரிமை மீறல்கள் குறித்த கேள்விகளை எழுப்பி, சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் நிபுணர்கள் இலங்கை தரப்பு குழுவைத் திணறடித்தனர்.

அத்துடன் புதிதாக உருவாக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கைதுகள், தடுத்து வைப்பு, நீதிமன்றத்தில் நிறுத்தல் போன்றன தொடர்பாக இடம்பெறவுள்ள விதிகள் தொடர்பாகவும், ஐ.நா. நிபுணர்கள் கேள்விகளை எழுப்பினர்.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் உறுப்பினரான பெலிஸ்காயர், ஹெய்டியில் ஐ.நா.அமைதிப்படையில் பணியாற்றிய இலங்கை படையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறார் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

அத்துடன் மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் நிறுத்தப்படவுள்ள இலங்கை படையினர் தொடர்பாக எத்தகைய பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், ஐ.நா. குழு உறுப்பினர்கள் இலங்கை குழுவிடம் கேள்வி எழுப்பினர்.

இலங்கை பாதுகாப்புப் படைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதைக் குற்றச்சாட்டுகளுக்கு சரியான பதில் அளிக்கப்படவில்லை என்று ஐ.நா. குழுவின்உறுப்பினரான பெலிஸ்காயர் தெரிவித்தார்.

தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரை 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க முடியும் என்பது மிகவும் நீண்ட காலம் என்றும் ஐ.நா.குழுவினர் தெரிவித்தனர்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தடுப்பு முகாம்களில், கொள்ளளவை விட, 200 தொடக்கம் 300 வீதம் அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. நிபுணர் ஜுவான் மெண்டிஸ் இந்த ஆண்டில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தில் கண்டறிந்துள்ளார் என்பதையும் ஐ.நா.குழுவினர் சுட்டிக் காட்டினர்.

2015, 2016 காலப்பகுதியில், அதிகாரபூர்வமற்ற தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பாகவும் ஐ.நா.குழு சுட்டிக்காட்டியது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், 2015ஆம் ஆண்டு தொடக்கம், இதுவரையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், சித்திரவதைகள் தொடர்பான 628 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள எண்ணிக்கையை விட இது பத்து மடங்கு அதிகம் என்று பெலிஸ்கோயர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்றும் ஐ.நா குழுவினர் கேட்டனர்.

பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாக 170 முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும், 24 சம்பவங்கள் குறித்தே இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதாகவும் ஐ.நா.குழுவினர் சுட்டிக்காட்டினர்.

ஐ.நா.குழுவின் இலங்கை குறித்த இந்த மீளாய்வு தொடரவுள்ளது. ஐ.நா.குழு எழுப்பிய கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் குழுவுக்கு சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தலைமை தாங்குகிறார்.

அத்துடன் ஐ.நாவுக்கான இலங்கை பிரதிநிதிகளான ரவிநாத் ஆரியசிங்க, ரொகான் பெரேரா மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும், தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ், பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளர் அஜித் ரோகண ஆகியோரும் இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தரப்பில் பங்கேற்றுள்ளனர். (இ-7-10)

## குழந்தைகளுக்கு பாதிப்பு இல்லை

போலியோ தடுப்பு மருந்துக்கு தட்டுப்பாடு காணப்படுவதால் 0.1 மி.லீ. தடுப்பு மருந்தினை குழந்தைகளுக்கு வழங்கும் சுற்றுநிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வாய் மூல விடைக்காக சுனில் ஹந்துன் நெத்தி எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார். போலியோ நோயை ஒழிப்பதற்கான புதிய வேலைத் திட்டமொன்று 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வேலைத் திட்டத்தின் கீழ் வாய் வழியான போலியோ தடுப்பு மருந்துடன் குழந்தைகளுக்கு தசையூடாக 0.5 மி.லீற்றர் மாத்திரை கொண்ட தடுப்பு மருந்தும் ஏற்றப்பட்டதா? 2019ஆம் ஆண்டளவில் போலியோ நோயை முற்றாக ஒழிப்பதற்கு எதிர்பார்த்துள்ள சுகாதார அமைச்சு, குழந்தைகளுக்கு சருமத்தின் ஊடாக 0.1 மி.லீற்றர் தடுப்பு மருந்தினை ஏற்றுவதற்கான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாவென சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. கேட்டிருந்தார்.

இந்த மருந்துக்கான தட்டுப்பாடு இலங்கையில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலேயே இடம்பெறுகின்றது. ஆகையால் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில், 0.1 மி.லீ தடுப்பு மருந்து ஏற்றப்படுகின்றது. அதுவும் இரண்டு தடவைகள் ஏற்றப்படுகின்றன.

ஆகையினால், மருந்தை குறைத்து ஏற்றுவதனால் குழந்தைகளுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படாது என்றும் அவர் கூறினார். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## தத்துவப் பாடல்கள் எழுதுவதில் கல்யாணசுந்தரம் சாதனை

301

..இப்படி பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் கவிதை வளர்ச்சிக்கும் திரைப்பட உலக பிரவேசத்துக்கும் துணையாக பாரதிதாசன் விளங்கியதால் தன்னுடைய கவிதை , கடிதம் எதுவாக இருந்தாலும் முதலில் பாரதிதாசன் துணை என்று எழுதும் வழக்கத்தை கையாண்டார். சில பாடல் எழுதும் போது வாழ்க பாரதிதாசன் என்றும் இருக்கிறார்.

### சினிமாவுக்கு பாடல்

1950ஆம் ஆண்டு வாக்கில் சினிமாவுக்கு பாட்டெழுது வதில் கண்ணதாசன், மருத காசி, உடுமலை நாராயண கவி போன்றோர் பிரபலமாக இருந்தார்கள். அந்தக் கால கட்டத்திலேயே கல்யாணசுந்தரமும் நுழைந்தார்.

1954இல் கல்யாண சுந்தரம் படித்த பெண் என்ற படத்துக்குத்தான் முதன் முதலாக 2 பாடல்கள் எழுதினார். ஆனால் அந்தப்படம் வெளிவர தாமதமானது.

இதனால் அவர் பாடல் எழுதி முதலில் வெளிவந்த படம் மகேஸ்வரி என்பதாகும். இந்தப்படம் 13.11.1955இல் வெளிவந்தது. அதற்கு அடுத்து 20.04.1956 இல் படித்த பெண் வெளிவந்தது.

மகேஸ்வரி படத்தில் கல்யாணசுந்தரம் எழுதிய பாடல் அறம் காத்த தேவியே குலம் காத்த தேவியே! நல் அறிவின் உருவமான சோதியே கண் பார்த்து அருள்வாயே அன்னையே! அன்னையே! என்பதாகும்.

1956ஆம் ஆண்டில் வெளிவந்த பாசவலை, ரங்கோபன் ராதா, மர்மவீரன் போன்ற படங்களுக்கு பாடல் எழுதினார்.

பின்னர் 1957,1958 ஆம் ஆண்டுகளில் எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் நடித்த படங்களிலும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் இடம்பெறத் தொடங்கின.

சுமார் 6 ஆண்டு காலத்தில் 57 சினிமாப் படங்களுக்கு 186 பாடல்களை எழுதினார் பட்டுக். கோட்டை கல்யாண சுந்தரம்.

புகழின் உச்சியில் இருந்த போது யாரும் எதிர்பாராத வகை யில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தனது 29 ஆவது வய தில் மரணம் அடைந்தார்.

அந்தக் காலத்தில் திரை உலகில் நுழைவது என்பது எளிதான காரியமில்லை. அதற்கு கல்யாண சுந்தரம் விதி விலக்கல்ல. பல சோதனைகளை அனுபவித்து இருக்கிறார். சென்னைக்கு வந்த



பாரதிதாசன் விருதை எம்.ஜி.ஆரிடம் இருந்து பெற்றுக் கொள்கிறார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் மனைவி.

அவர் குடியேறியது ராயப்பேட்டை பொன்னு சாமி நாயக்கர் தெருவில் இருந்த 10ஆம் நம்பர் வீட்டில். அங்கு ஒரு அறையை 10 ரூபாய்க்கு வாடகைக்கு பிடித்தார். அது சிறிய அறை. அதில் அவரது நண்பர்களான ஓவியர் கே. என். ராமச்சந்திரனும் நடிகர் ஓ.ஏ. கே.தேவரும் தங்கி இருந்தனர்.

### துணிச்சல்காரர்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆரம்ப காலத்தில் பணத்துக்கு கஷ்டப்பட்டாலும் துணிச்சல்காரராக இருந்து வந்திருக்கிறார். சினிமா கம்பனி ஒன்றுக்கு அவர் பாட்டெழுதிக் கொடுத்தார். அதற்குரிய பணம் வந்து சேரவில்லை. பணத்தைக் கேட்க பட அதிபரிடம் சென்றார். பணம் இன்னிக்கு இல்லே! நாளைக்கு வேண்ணா வந்து பாருங்கோ என்று பதில் வந்தது. ஆனால் கல்யாண சுந்தரமோ பணம் இல்லாமல் நகருவதில்லை என்ற எண்ணத்துடன் நின்று கொண்டிருந்தார்.

(தொடரும்)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 23rd December, 2016 from suitably qualified persons for the following posts.

**1.POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

1.An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2.A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

OR

3.A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**Salary Scale**: U-EX 1 (II) Rs. 26,020-3X585-27,775(EB) 28,420; 12X645-36,160/-p.m.

**Selection**: By Structured Interview.

**2.POST OF MARSHAL, GRADE II [ Vavuniya Campus]**

**Qualifications:**

1.A Graduate from a recognized University.
2.Physique: Height : 5'5"
Chest : 32" deflated

Note:-Preference will be given to those with Police Armed Forces background and active participation in Sports Activities, Social Welfare Activities within the University at National Level.

**Salary Scale** : U-MN 2 (II) – Rs. 19,470-18X245-23,880/- p.m.
**Selection** : By Interview

**3.PUBLIC HEALTH INSPECTOR, GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Interview

**4.CARE TAKER CUM REPAIRER, GRADE II (University of Jaffna) (DANCING INSTRUMENTS)**

**Qualifications:**

i.a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings;

OR

b) A Pass in 8th Standard and who have satisfactorily completed 5 years' permanent service in the UGC or a Higher Educational Institution.

ii.Knowledge and ability in -
Repairing Kandyan and Low Country Drums, Davul, Tamme ttam, Uddekki, Raban etc. Should have at least two years experience in repairing the above instruments in a Higher Educational Institution, Government Department or a Public Corporation.

iii.Experience in maintenance of issue registers and storage of instruments.

**Note:** Preference will be given to those with knowledge and ability in playing dancing instruments.

**Salary Scale** : U-MN 1(III)A- Rs.16,070 – 17 x 155 – 18,705 p.m.

**Selection** : By Practical Test and Interview.

**(ii) CARE TAKER CUM REPAIRER, GRADE II (University of Jaffna) (MUSICAL INSTRUMENTS)**

**Qualifications:**

i.a) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings;

OR

b) A Pass in 8th Standard and who have satisfactorily completed 5 years' permanent service in the UGC or a Higher Educational Institution.

ii.Applicants should have at least 5 years' experience and ability in repairing and fixing of strings in a Violin, Sitar and Esraj etc., and applying cement and fixing hides etc., in Tabla and Murudangam; and repairing Harmonium and other local instruments in a Higher Educational Institution or in a Government Department or in a recognized institute.

iii.Experience in maintenance of issue registers and maintenance and storage of musical instruments.

**Note:** Preference will be given to those with a basic knowledge in music.

**Salary Scale** : U-MN 1(III)A- Rs.16,070 – 17 x 155 – 18,705 p.m.

**Selection** : By Practical Test and Interview

**5.MECHANIC, GRADE II (Faculty of Technology, Kilinochchi Premises)**

**Qualifications :**

i.Pass in the 8th Standard
ii. Should be conversant with
a.Reading scales, micrometers and recording fractional dimensions.
b.Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;

AND

c. Reading and understanding drawings,

iii. Not less than 2 years' experience as a Mechanic or Machine Operators.

**Salary Scale** : U-PL3(III) Rs.15,650-16x140-17,890p.m

**Selection** : By Trade Test and Interview

**6.CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in lands caping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 -36,160/- p.m.

**Selection** : By Structured Interview.

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

**Note: *Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non–Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University or the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annex copies of relevant documents)**

Duly completed application should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 23.12.2016.**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corpor ations/Boards.
Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR,
University of Jaffna, 16.11.2016.






யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஈ-லேனிங் (E-Learning) செயற்றிட்டம் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் என். அம்பிகைபாகனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பேராசிரியர் எதிர்வீரசிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.சர்வேஸ்வரன், ஈ -லேனிங் இணைப்பாளர் செந்தில்குமரன், உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.(படங்கள்:- பொ.சோபிகர்)

# பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...



# கைத்தொழில், பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்

(தொடர்ச்சி)

75.கோழிவளர்ப்புக் கைத்தொழிலாளர்களுடன் நான் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது. மேலதிக முதலீட்டுக்கான பிரதான தடையாக விளங்குவது ஆகக்கூடிய சில்லறை விலையாகும். (Maximum Retail Price) என்பது எனக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறான பொருத்தமான குறைந்த சில்லறை விலையினை இலகுவாக்கும் அதே வேளை. முழுமையான கோழி இறைச்சியின் கிலோ கிராமுக்கான விலை 420 ரூபாவாகப் பேணப்பட வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துமாறு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் அதேவேளை சந்தைக்கான 40 சதவீதமான நிரம்பல் முழுமையான கோழி இறைச்சியாக இருக்க வேண்டும்.

ஆயினும். விலைகள் நியாயமற்ற மட்டங்களுக்கு அதிகரிக்கப்பட்டால் அரசாங்கம் விலையினை உறுதிப்படுத்துவதற்காக கோழி இறைச்சியினை இறக்குமதி செய்வதற்கும் தயங்கமாட்டாது.

76.அரசாங்கம் ஆதரவளிக்கும் புதிய விரிவான கிராமியக் கடன் திட்டத்தினூடாக குஞ்சு பொரிப்பகங்களை ஸ்தாபிப்பதற்கும் தனியார் துறையினை ஊக்குவிப்பதோடு அதற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

**மலர்ச்செடி வளர்ப்பு மற்றும் அலங்கார மன வளர்ப்பு கைத்தொழில்**

77. சபாநாயகர் அவர்களே. மலர்ச்செடி வளர்ப்பு கைத்தொழிலினை ஊக்குவிப்பதற்காக வட்டியில் 50 சதவீதத்தினை அரசாங்கம் மானியமாக வழங்குவதன் மூலம் 2.000 நாற்றுமேடைகளை ஸ்தாபிப்பதற்கு நான் ஊக்கமளிப்பதுடன் அதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிகமாக ஆகக்கூடிய கடன் ரூபா 500.000 வரையறைக்குள் கடன் வழங்கும் திட்டத்திற்கு விரிவான கிராமியக் கடன் திட்டத்தின் மூலம் வட்டியில் 50 சதவீதத்தினை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

வெளியார் வளர்ப்பு முறையினைப் பயன்படுத்தி விரிவாக்கலுக்கான ஆற்றல் காணப்படும் அலங்கார மீன் வளர்ப்பு கைத்தொழிலுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும். இதற்காக ரூபா 25 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

**இடைப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்**

78.காணிப் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கும் வருமான மூலங்களை பன்முகப்படுத்துவதற்கும் சிறுபற்றுநில உரிமையாளர்களுக்கு உதவும் வகையில் இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்களுக்கிடையில் கொக்கோ. கோப்பி. பாக்கு மற்றும் மிளகு போன்ற இடையீட்டுப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி**

79. சபாநாயகர் அவர்களே. எமது அரசாங்கமானது மொறகஹகந்த. உமா ஓயா. மற்றும் யான் ஓயா போன்ற பாரிய பலநோக்கு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கவிருப்பதுடன் இவற்றின் மூலம் வடக்கு, கிழக்கு. வடமேற்கு. ஊவா மற்றும் தென் மாகாணங்களின் விவசாயக் குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

இக் கருத்திட்டங்களானது விவசாயக் குடும்பங்களுக்குத் தேவையான நீரை வழங்குவது மாத்திரமன்றி அக்கருத்திட்டங்கள் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதுடன் குடிநீர் வசதியினையும் வழங்குகின்றது.

இக்கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 60.045 மில்லியனை ஏற்கனவே நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

80.இதேபோன்று உமா ஓயா கருத்திட்டத்திற்கும் ரூபா 13.000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சபாநாயகர் அவர்களே. உமா ஓயா கீழ் கரை அபிவிருத்திப் பணிகளுக்கு ரூபா 2.900 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தல்பிட்டிகல நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

81.யான் ஓயா கருத்திட்டத்திற்காக ரூபா 2.400 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இக் கருத்திட்டத்திலிருந்து பெறப்படும் நன்மைகளைக் கவனத்திற் கொண்டு இந் நோக்கத்திற்காக ரூபா 1.000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிவதுடன் அதேபோன்று கீழ் மல்வத்து ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்திற்காக மேலும் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

82.அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திற்காக ரூபா 2.020 மில்லியனை நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

இதன் மூலம் 33 பாரிய அணைக்கட்டுகள் புனரமைப்பு. 80 பாரிய அணைக்கட்டுகளுக்கான அடிப்படை வசதிகளை வழங்குதல்.50 நீர்அளவை மற்றும் விவசாய - வானிலை அவதான நிலையங்களை ஸ்தாபிப்பதுடன் அவற்றினை தரப்படுத்தல் என்பனவும் இவற்றுள் அடங்கும்.

83.கடந்த வருடம். முன்னோடி அடிப்படையில் நீர்ப்பாசனத் திணைக்களம் உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறன் முகாமைத்துவம் தொடர்பான கருத்திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

இக் கருத்திட்டத்தினை வெற்றியடையச் செய்வதற்கும் இக் கருத்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதற்கும் 2017 இல் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

84.மினிப்பே இடதுகரை புனரமைப்பு செயற்றிட்டத்திற்காக நாம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கித்துள் மற்றும் றுகம் ஆகிய இரண்டு குளங்களும் ஒன்றிணைக்கப்பட்டு நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளத்தடுப்புக்கான பெரியதொரு நீர்த்தேக்கமாகஉருவாக்கப்படும். மொனறாகலை மாவட்டத்தில் பல்நோக்கு கருத்திட்டமொன்றாக கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டமும் செயற்படுத்தப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தாராபுரம் குளமும் புனரமைக்கப்படும். மேற்குறித்த கருத்திட்டங்களுக்காக ரூபா 600 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

85.புதிய காணிகள் 1.675 ஏக்கர்களுக்கும் தற்பொழுதுள்ள காணிகள் 11.440 ஏக்கர்களுக்கு நீர் வழங்குவதற்கான ஹெட ஓயா நீர்ப்பாசன நீர்த்தேக்கம் மற்றும் நீர் வழங்கல் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இக் கருத்திட்டமானது லகுகல. பொத்துவில். பனாம மற்றும் சியம்பலாண்டுவ பிரதேசங்களுக்கு குழாய் மூலமான குடிநீர் வசதிகளை வழங்கும். இக் கருத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 20 பில்லியன் வெளிநாட்டு வளங்களின் மூலம் நிதி அளிக்கப்படும்.

86.சபாநாயகர் அவர்களே. மனிதர்களின் அத்துமீறிய செயற்பாட்டின் காரணமாக தரைக்கீழ் நீரானது மாசடைந்து மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் தரைக்கீழ் நீரினை கண்காணிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பித்துள்ள அதேவேளை. பொலநறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் உள்ளடங்கலாக 8 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இக் கருத்திட்டத்தினை விரிவாக்குவதற்கு நான் முன்மொழிவதுடன் இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

**கல்வித்துறை**

87. சபாநாயகர் அவர்களே. கல்வியானது எமது அபிவிருத்தி மாதிரியில் முக்கியமானதொன்றாகும். நாம் ஆட்சிக்கு வந்தது முதல் கல்வித் துறைக்காக போதிய நிதி வழங்குவதனை உறுதிப்படுத்துகின்ற எமது வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளோம்.

முன்னைய அரசாங்கத்தின் முறையற்ற அரசிறை முகாமைத்துவத்தின் காரணமாக கடந்த வருடம் மிக மோசமான அரசிறை நெருக்கடியினை நாம் எதிர்நோக்கிய போதிலும். 2014 இல் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளைப் போன்று 3 மடங்கான ஒதுக்கீடுகளை 2016 இல் நாம் மேற்கொண்டோம்.

எவ்வாறாயினும். 2016 இன் மூன்றாவது காலாண்டின் இறுதியில் கல்வி அமைச்சானது ஏறக்குறைய ரூபா 38.850 மில்லியனை மாத்திரமே பயன்படுத்த முடியுமாக இருந்தது. நாம் இத்துறைக்கான தேவையினை மிகக்கவனமாக ஆராய்ந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 90.000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம். 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் 2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டினை விட குறைவாயினும். அது 2014 இன் ஒதுக்கீட்டினை விட 70 சதவீதம் அதிகமாகும். மேலும் கல்வித்துறையின் அபிவிருத்தியினை மேலும் வலுப்படுத்துவதற்கு ரூபா 17.480 மில்லியனை மேலதிக ஒதுக்கீடாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

88.பற்றாக்குறையான உட்கட்டமைப்பு. ஆசிரியர் அபிவிருத்தி. பாடவிதான அபிவிருத்தி மற்றும் இடைவிலகலினை முற்றாக இல்லாதாக்குவதை இலக்காகக் கொண்ட மறுசீரமைப்பு. 13 ஆம் ஆண்டு வரையான கட்டாய கல்வி மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறையினை அடிப்படையாக்கொண்ட கல்வியினை மையப்படுத்திய உயர் கல்வியினை தொடரும் மாணவர்களுக்கான தேர்வினை விரிவாக்குதல் என்பவற்றில் காணப்படும் பிரச்சினைகளை கல்வித்துறைக்கான உத்தேச முதலீடு தீர்த்து வைப்பதாக இருக்கும். சிறுவர் கல்வி முதல் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைக் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகிய அனைத்து துறைகளிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

இப் பின்னணியில் ஆற்றல் மிக்க தனிமனிதர்களை உருவாக்குகின்ற எமது கல்வி முறைமையினை எம்மால் ஒழுங்கமைக்க முடியும்.

89.பெயரளவில் பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கான அதிகரித்த கேள்வி அனைத்து தரப்பினருக்குமிடையில் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. அனைவருக்கும் சமவாய்ப்பினை வழங்குகின்ற தரமான சிறந்த கல்வியினை ஒவ்வொரு குழந்தையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமையினைக் கொண்டுள்ளதனை நாம் அறிவோம். ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் வகுப்பறைகள். ஆய்வுகூடங்கள் மற்றும் நூலகங்கள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக என்றுமில்லாதவாறு ரூபா 21.000 மில்லியனை ஒதுக்கீடு செய்வது எமது அர்ப்பணிப்பாகும்.

90. 13 வருட கட்டாய பாடசாலை கல்விக் கொள்கையினை செயற்படுத்துவதற்கு பாடசாலைகளுக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 5.000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்

91. 2017 இன் இறுதியளவில். நீர். மின்சாரம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய சகல தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் இருப்பதனை நாம் உறுதிப்படுத்துவதுடன் இந் நிகழ்ச்சித் திட்டத்தினை மேலும் துரிதப்படுத்துவதற்கு நாம் ரூபா 3.000 மில்லியனை ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளோம்.

2016 இல் 450 பாடசாலைகளுக்கு அத்தகைய வசதிகளை ஏற்பாடு செய்வதற்கான நிதி ஒதுக்கீடுகளை நிறைவு செய்துள்ளோம். 2017 இல் ரூபா 2.000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்குநான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

அரைக்கொத்து அரிசி அன்னதானம்.
விடிய விடிய மேளதாளம்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலமைப்புச் சீர்திருத்தமும் இனப்பிரச்சினைத் தீர்வும் ஒன்றா!

கவிஞர் முருகையன் நம் ஈழத்து மண்ணின் மிகச் சிறந்த படைப்பாளி. அவர் எழுதிய கவிதைகளில் ஒன்று 'தேள் கண்டார் தேளே கண்டார்' என்பது.

கவிதை தரும் பொருள் பற்றி மட்டும் இங்கு பேசலாம். ஒரு வீட்டில் தேள். அந்த தேளை அடிப்பதற்கு வீட்டில் இருந்தவர்களும் அயல்வீட்டா ரும் ஒன்று கூடி விட்டனர்.

தேளை அடிப்பதற்கு ஆயுதம் எடு என்றார் ஒருவர். இன்னொருவர் ஊன்கொண்டு வா என்றார். ஒரே களேபரம். அவ்வேளை ஒரு சிறுவன் அங்கு வருகிறான். தேள் சமாச்சாரம் அறிந்த அவன் தேளுக்கு அண்மையாகச் சென்று பார்க்கிறான்.

உடனடியாக அந்தத் தேளை வாலில் பிடித்துத் தூக்கியபடி வருகிறான். அங்கு நின்றவர்கள் அனைவரும் அதிசயிக்கின்றனர். எப்படி இது முடியும்? என்ற வினா அந்த அதிசயிப்புக்கூடாகத் தெரிகிறது.

எனை அப்பு இது செத்துப்போன தேள் என்கிறான் சிறுவன். அப்போதுதான் வாள்கொண்டு வா! ஊள் கொண்டு வா! என்ற கத்தியவர்களுக்கு வீட்டில் கிடந்த தேள் ஏற்கெனவே செத்துப்போன தேள் என்பது தெரியவருகிறது.

அட! தேளுக்கு அருகில் சென்று பார்த்திருந்தால் நிலைமை தெரிந்திருக்குமல்லவா? நாங்கள் அது பற்றிச் சிந்திக்கவேயில்லை. ஆனால் அந்தச் சிறுவன் எல்லாத்துணை கெட்டிக்காரன்...

அங்கு நின்றவர்களின் சிந்தனை இப்படியாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதுவே கவிஞர் முருகையனின் தேள் கண்டார் தேளே கண்டார் என்ற கவிதையின் கருப்பொருள்.

இந்தக் கவிதை ஊடாக கவிஞர் சொல்லவந்த விடயம், செத்த தேளை அடிப்பதற்கு பெரியவர்கள் ஓடித் திரிகின்றனர். ஆனால் அந்தச் சிறுவனோ தேளை வாலில் பிடித்துக்கொண்டு வருகிறான்.

ஆக, இப்படியான சம்பவங்கள் நம் நிஜ வாழ்க்கையிலும் நடப்பதுண்டு. பெரியவர்கள் சிந்திக்காமல் செயற்படும் நிலைமைகளும் இருக்கவே செய்கின்றன என்பதுதான்.

அது சரி கவிஞர் முருகையனின் கவிதை இந்த இடத்தில் எதற்கானது? என்று நீங்கள் முணுமுணுப்பது நமக்குக் கேட்கிறது.

எல்லாம் காரணத்தோடுதான். அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் முன்வரைவு வருவதை கண்டு நம் அரசியல் தலைவர்கள் சிலர் புளகாங்கிதம் அடைகின்றனர்.

ஆகா! புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வந்துவிட்டால் எங்கள் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று அவர்கள் மகிழ்ச்சியடைவது கண்டு வேதனை கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

செத்த தேளை அடிப்பதற்கு வாளும் ஊளும் எடுத்தவர்கள் போல அரசியலமைப்புச் சீர்திருத்த முன்வரைவு வெளிவர இருப்பதிலேயே மகிழ்ச்சி ஆரவாரம் கொள்வோர் உண்மையில் தமிழினத்தின் – தமிழ் மக்களின் உணர்வுகளை அறியாதவர்கள் என்று அடித்துச் சொல்ல முடியும்.

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பது நாட்டில் சில ஏற்றத்தாழ்வுகளை, அதிகார எல்லைகளை சமப்படுத்துவதாக அமையுமேயன்றி அதுவே இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாட்டாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஆத்மார்த்தமானது. தமிழர் தாயகத்தோடும் தமிழ் மக்களின் ஆழ் மனதது உணர்வுகளோடும் சம்பந்தப்பட்டவை.

உயர் பாதுகாப்பு வலயத்தில் முச்சந்தியில் உள்ள அரச மரத்தின் கீழ் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படாதவரை; பாதுகாப்பு என்ற பெயரில் படையினர் தமிழர்களின் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்யும் வரை; இது பௌத்த சிங்கள நாடு என்று தென் பகுதியினர் மார்தட்டும்வரை ; சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்க முடியும் என்று கூறுகின்ற அருவருப்பு மனநிலை இருக்கும்வரை

எந்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் வந்தாலும் இனப்பிரச்சினை தீராது. இந்த உண்மையை உணராமல் செத்த தேளை அடிக்க முற்படுவோரை என் செய்வோம் பராபரமே.

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமைக்கான சான்றுகளுடன் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ 24 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர் என வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## முத்தமிழ் விழா இன்று

தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாடப்பிரிவு முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## ATM ஊடாக பணம்; 5 ரூபாய் புதிய வரி அறவிடப்படமாட்டாது

(கொழும்பு)

தானியங்கி இயந்திரங்கள் (ATM) ஊடாக பணம் எடுக்கும் போது வாடிக்கையாளர்களிடமிருந்து 5 ரூபாய் புதிய வரி அறவிடப்படமாட்டாது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான வரி வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படாது.

நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் போது 5 ரூபாய் வரி அறவீடு செய்யப்படவுள்ளது.

இதன்படி, வங்கியின் வாடிக்கையாளர்கள் தானியங்கி இயந்திரங்களின் ஊடாக பணம் எடுக்கும் போது புதிதாக 5 ரூபாய் வரி அறவீடு செய்யப்படாது என அவர் தெரிவித்தார். (இ-7-10)

## சர்வதேச முதியோர் தினவிழா

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும் சண்டிலிப்பாய் பிரதேச மட்ட முதியோர் சங்கங்களின் சமாசம் மற்றும் மாற்றுவலுவுடையோர் சுய உதவிக் குழு இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தினவிழா நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசராட்ணம் செல்வகுமாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் வ.செல்வம், வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ். சற்குணராஜா, யாழ்.மாவட்ட முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செம்மன் பாலகுமாரி, யாழ். மாவட்டசமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைப்பாளர் திருமதி. வி.கிருஷாந்தி, வலி. தென்மேற்கு சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. சிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-134)

## கணித,விஞ்ஞான தினமும் நூல் வெளியீடும் இன்று

யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கணித, விஞ்ஞான தினமும் நூல் வெளியீடும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மாணவன் செல்வன் ஜெயக்குமார் அஜந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட தாவரவியற்றுறைத் தலைவர் திருமதி குலரஜனி நிறஞ்சன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவன் வைத்தியகலாநிதி சிவபாலசிங்கம் ஜெசீசன், கௌரவ விருந்தினராக யாழ். சாரங்கா நகைமாட தொழிலதிபர் எம். ஜே.எவ்.பஞ்சாட்சரம் சிவபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## சரத் வீரவன்சவுக்கு பிணை

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் சகோதரரான சரத் வீரவன்சவுக்கு நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தின்போது, அரசாங்க வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், பொலிஸ் நிதிக்குற்ற மோசடிப் பிரிவுக்கு வாக்குமூலமளிக்க கடந்த செப்டெம்பர் மாதம் முத லாம் திகதியன்று சென்றிருந்த சரத் வீரவன்சவை, பொலிஸ் நிதிக்குற்ற மோசடி பிரிவினர் கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016


"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அதிசயமாக இருப்பதே அதிஉன்னதமானது"

~மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ் பிரதேசத்தில் தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி நகர், பத்தமேனி, கதிரிப்பாய், தம்பாளை, இடைக்காடு, செல்வநாயகபுரம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சத்திய தரிசனம்



### தப்புக் கணக்குப் போடாதீர்கள்

❖ எல்லாரும் தாகத்திற்கு பருகும் நீரினைப் பாருங்கள். அயல்நாட்டார் "வாட்டர்" என்பர். வடஇந்தியர் "பானி" என்பர். தெலுங்கில் "நீலு" என்று கூறுவர். பல பெயர்களில் அழைத்தாலும் பொருள் ஒன்றே. இடம் வேறுபட்டாலும், மொழி வேறுபட்டாலும், மனிதர் வேறுபட்டாலும் பொருள் என்னவோ ஒன்றினைத் தான் குறிக்கிறது. அதேபோல பல்வேறு இடங்களில் பல பெயரிட்டு வணங்குவதும் ஒரே தெய்வத்தைத் தான்.

❖ புல்லாங்குழலின் உட்புறம் காலியாக இருக்கும். வெளியில் ஒன்பது துவாரங்கள். தெரியும். உடல் எனும் புல்லாங்குழலுக்கும் ஒன்பது துவாரங்கள். உள்ளே உள்ளிட்டு எதுவுமில்லாததால் அது பண்ணோடு இறைவனைப் பாடப் பயன்படுகிறது. அதுபோல நம்மிடம் உள்ள ஆசைகளை அகற்றி விட்டால் உடல் எனும் புல்லாங்குழலும் கடவுளுக்கு நெருக்கமானதாகி விடும்.

❖ கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் தான் உண்மையானவர்கள். கடவுள் நம்பிக்கையற்றவர்கள் இரண்டும் இரண்டும் ஐந்து என்று தப்புக்கணக்கு போடுபவர்கள்.

❖ அடுத்தவர் குறைகளை ஆயிரம் கண்கள் கொண்டு பார்ப்பதிலேயே நேரத்தையெல்லாம் வீணாக்கினால் நம் மனம் தான் அசுத்தமாகி விடும். பொறாமை மனதில் புகுந்து விடாமல் இருக்க கவனம் வேண்டும். நம் மனம் கண்ணாடி போன்றது. அதில் தூசி படியாது தூய்மையாக இருந்தால் தான் தெளிவான காட்சி காண முடியும்.

# பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் நடத்தும் மின்னொளியிலான கபடிச் சுற்றுப்போட்டி

## சென்.தோமஸ் "B" வெற்றி



வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்தி சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடிச் சுற்றுப்போட்டித் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

இப்போட்டியில் A பிரிவில் ஐந்து கழகங்களும் B பிரிவில் ஐந்து கழகங்களும் மொத்தமாக 10 கழகங்கள் போட்டியிடுகின்றன.

நேற்று முன்தினம் 15.11.2016 மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் பருத்தித்துறை முனை சென்.தோமஸ் B அணி சுப்பர் மடம் சித்தி விநாயகர் B அணியை எதிர் கொண்டது. விறுவிறுப்பாகஆரம்பித்த போட்டியில் சித்தி விநாயகர் B அணி ஆதிக்கம் செலுத்தி புள்ளிப்பட்டியில் முன்னேறிக் கொண்டே இருந்தது.

சுமார் 10 நிமிடங்களின் பின்னர் வீறுகொண்டெழுந்து சென். தோமஸ் B அணி தமக்குரிய பாணியில் வியூகங்களை வகுத்து விளையாட்டை சுவரிசமாக்கி தமக்குரிய புள்ளியை முன்னேற்ற தொடங்கியது.

அவர்களின் வியூகங்களுக்குள் விழுந்து போன சித்தி விநாயகர் B அணி மீண்டெழும்ப முடியாது திணறியவண்ணம் காணப்பட்டது. இறுதியாக போட்டி முடிவுக்கு வரும் போது சென்.தோமஸ்B அணி 65:30 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இத்தொடரில் தொடர்ந்து இரு போட்டிகளில் வெற்றி பெற்றதனால் 4 புள்ளிகளுடன் B பிரிவில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் B அணி முன்னிலை வகிக்கின்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனான பருத்தித்துறை முனை சென். தோமஸ் B அணியின் வீரர் அஜித் தெரிவு செய்யப்பட்டார். (க)

# பருத்தித்துறை ஐக்கியத்தை வென்றது சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்





வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கம்- சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியில் கபடிச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் B அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் வி.கழக அணி விளையாடியது.

ஆட்டம் தொடக்கம் முதல் விறுவிறுப்பாக சென்றது. போட்டியில் இரு அணிகளும் பலமாக இருந்த போதும் சென். அன்ரனிஸ் முன்னிலை வகித்து வெற்றி பெற்றது. 28:16 என்ற புள்ளியின் அடிப்படையில் ஆட்டம் முடிவு பெற சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.

4 புள்ளிகளைப் பெற்று தொடரில் மொத்தமாக 8 புள்ளிகளை பெற்று முன்னிலையில் காணப்படுகிறது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனிஸ் அணி வீரர் சலன் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கான விருதினை கழகத்தின் மூத்த உறுப்பினர் குமார் அண்ணா வழங்கி கௌரவித்தார். (க)

# இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகம்

முல்லைத்தீவு போக்குவரத்துச் சபை வடமாகாண ரீதியில் நடத்திய மென்பந்துச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிப்போட்டியில் உடுவில் H2H அணியை வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் 10 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 102 ஓட்டங்கள் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சுகந்தன் 33 ஓட்டங்களையும் பிரகாஷ் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிந்து 3 விக்கெட்டினையும் யஸ்ரின் 01 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உடுவில் H2H அணியினர் 10 ஓவர்களில் 6 விக்கெட்டினை இழந்து 96 ஓட்டங்கள் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கபிசாந் 28 ஓட்டங்களையும் ரஞ்சித் 23 ஓட்டங்களையும் அனோஜன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் துவாரகன், ஜொனி ஜெயகோபன் தலா 2 விக்கெட்டினையும் ரஜிபன், செந்திரன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக அதிரடியான 31 ஓட்டங்களை பெற்ற பிரகாஷ் தெரிவானார். (க)

# அவமானகரமாக உணர்கிறேன்




அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டியில், இனிங்ஸ் தோல்வியைத் தழுவிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித், ஊடகவியலாளர் மாநாட்டில் அமர்வதற்கே, அவமானகரமாக உணர்வதாகத் தெரிவித்தார். உலகின் முதல்நிலை டெஸ்ட் அணியாக இருந்த அவ்வணி, எவ்வளவு தூரம் கீழிறங்கியுள்ளது என்பதை, அவரது வார்த்தைகள் வெளிப்படுத்தின.

இது, டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி பெறும், 5ஆவது தொடர்ச்சியான தோல்வியாகும். இதற்கு முன்னர், இலங்கையில் வைத்து 3 போட்டிகளில் தோல்வியடைந்து, தமது முதலிடத்தை அவ்வணி பறிகொடுத்திருந்தது.

இவ்வாறான மோசமான திறமை வெளிப்பாட்டைத் தொடர்ந்து, ஊடகவியலாளர் மாநாட்டில் அமர்ந்த ஸ்மித், "உண்மையைச் சொல்வதானால், இங்கே அமர்வதற்கு அவமானகரமாக உணர்கிறேன். அதிகமான தடவைகள், விக்கெட்டுகளை ஒரு தொகையாக இழந்தோம். 30 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகள். முதல் இனிங்ஸில் 85 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகள். அவ்வாறு நடக்கும் போது, போட்டிகளை உங்களால் வெல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை, இது அடிக்கடி இடம்பெறுகிறது" என்றார். அவுஸ்திரேலிய அணி, சிறப்பாகப் போராடவில்லை எனத் தெரிவித்த ஸ்மித், கடினமான தருணங்களில் போரிட்டு, இணைப்பாட்டங்களை உருவாக்கத் தவறிவிட்டதாக ஸ்மித் குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டுவரை அணியின் பயிற்றுநராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள டெரன் லீமனின் எதிர்காலம் தொடர்பாகக் கேட்கப்பட்ட போது, "நாங்கள் சிறப்பாக விளையாடாமைக்கு, அவர் பொறுப்புக் கிடையாது.

எங்களுடைய பணிகளை நாங்கள் தான் செய்ய வேண்டும். பயிற்சிகளிலும் தயார்படுத்தல்களிலும், அவரால் செய்யக்கூடிய அனைத்தையும் அவர் செய்கிறார்" என்று குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள், சிறப்பாகத் தயார்படுத்தினாலும், ஆடுகளத்தில் சிறப்பாகச் செயற்படவில்லை என்று குறிப்பிட்ட ஸ்மித், சர்வதேச கிரிக்கெட்டின் அழுத்தங்களை, தாங்கள் சிறப்பாகக் கையாளவில்லை என்றும் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அணியின் மோசமான துடுப்பாட்டப் பெறுகைளைத் தொடர்ந்து, முதற்தரத் தொடரான ஷெபீல்ட் ஷீல்ட் தொடரில், அவ்வணியின் துடுப்பாட்ட வீரர்களில் அனேகமானோர் பங்குபற்றவுள்ளதாகவும், ஸ்மித் உறுதிப்படுத்தினார். தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் முகமாகவே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)





பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத்திட்ட நிதியிலிருந்து சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனால் மகேசன் விளையாட்டுக்கழகத்தினருக்கு ரூபா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணமும் இமையாணன் GTMS பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணமும் அண்மையில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அவர்களால் வழங்கி வைக்கப்படுவதனை படத்தில் காணலாம். (க-60)

## ஆட்சி மாறலாம்...

சீன தூதுவர் யீ ஷியான்லியங் தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற சீன-இலங்கை வர்த்தக கலந்துரையாடலில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே இலங்கைக்கான சீன தூதுவர் யீ ஷியான்லியங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு என்பது வெறுமனே இரு நாடுகளுக்கு உடையதாக கருதப்பட முடியாது. அது நட்பு ரீதியானதும் ஆழமானதுமாகும். ஆட்சிகள் மாறலாம். ஆனால் அவை உறவுகளை பாதிப்பதாக அமைந்து விடக்கூடாது. இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்பு போன்றே சீனா முழுமையான ஒத்துழைப்புகளை இலங்கைக்கு வழங்கி வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் சீன விஜயத்தின் ஊடாக இரு தரப்பிற்கு இடையில் காணப்படுகின்ற ஆழமான புரிதலை உணர முடிகின்றது. இதனை மேலும வலுப்படுத்தும் நோக்கில் சீன தலைவர் இலங்கைக்கு அனைத்து பொருளாதார அபிவிருத்தி தேவைகளின் முழு அளவில் ஒத்துழைப்புகளை வழங்குமாறு எமக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றார். (செ-11)

## இலங்கையிடம்...

ஜெனிவாவில் நடைபெற்று வரும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழுவின் 59 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான இரண்டு நாள் மீளாய்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இதன்போது சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் நிபுணர்களால் மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கடுமையான கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கத் தரப்பினர் முகங்கொடுத்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றாக புதிதாக உருவாக்கப்படவுள்ள சட்டத்தில் தடுத்து வைத்தல், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துதல் போன்றன தொடர்பாக இடம்பெறவுள்ள விதிகள் தொடர்பாகவும் ஐ.நா.நிபுணர்கள் கேள்வி எழுப்பினர்.

அத்துடன், இலங்கை படைத்தரப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதைக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் உரிய பதில் அளிக்கப்படவில்லை என ஐ.நா.நிபுணர் குழுவின் துணைத் தலைவரான பெலிஸ் காயர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரை தடுத்து வைத்திருக்கக்கூடிய காலம், தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கக் கூடியோரின் எண்ணிக்கை தொடர்பிலும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா நிபுணர் குழுவினர் கேள்வி எழுப்பினர்.

2015 மற்றும் 2016ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற உத்தியோகபூர்வமற்ற தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பாகவும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.நிபுணர் குழுவினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

2015ஆம் ஆண்டு இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இதுவரை சித்திரவதைகள் தொடர்பில் 628 முறைப்பாடுகள் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள எண்ணிக்கையை விடபத்து மடங்கு அதிகம் என்று சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.நிபுணர் குழுவின் துணைத் தலைவரான பெலிஸ் காயர் குறிப்பிட்டார்.

இலங்கை பொலிஸ் அதிகாரிகளால் மேறகொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பாக 170 முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும், 24 சம்பவங்கள் குறித்தே இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஹெய்டியில் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றிய இலங்கை படையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று பெலிஸ் காயர் குற்றம் சுமத்தினார்.

இந்நிலையில் இலங்கை படைத்தரப்பு தொடர்பில் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.நிபுணர் குழு எழுப்பிய கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.குழுவின் 59ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசு சார்பில் சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தலைமையிலான குழுவில் ஐ.நாவுக்கான இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, ரொகான் பெரேரா, சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், தேசிய புலனாய்வுப் பிரிவன்தலைவர் சிசிர மென்டிஸ் மற்றும் பொலிஸ சட்டப்பிரிவின் பணிப்பாளர் அஜித் ரோகண ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். (செ)

## நல்லாட்சி...

ந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கான பொறுப்புகூறலை நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்று சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் வடக்கிலும், கிழக்கிலும் மீண்டும் வன்முறைகள் ஏற்படாத வண்ணம் சமாதானச் சூழலை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழர் பகுதிகளில் வலுக்கட்டாயமாக அமைக்கப்படுகின்ற பௌத்த விகாரைகள், அங்கு நிலவுகின்ற இராணுவப் பிரன்னமும், அதன் ஆதிக்கம் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

புத்தர் சிலைகளை நிறுவுவதன் ஊடாக தமிழருக்கு எதிராக இன அழிப்பு யுத்தம் உருவாகியிருப்பதாக சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், இந்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சபையில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜோன் அமரதுங்க, புதிய அரசியலமைப்பின் ஊடாக சிறந்த தீர்வுகளையும், நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு நல்லாட்சி அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மிகவும் உணர்வுப் பூர்வமான உரையை சபையில் இன்று (நேற்று) நிகழ்த்தியிருக்கின்றார். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் நியாயமான தீர்வினை வழங்குவதற்கும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் புதிய அரசியலமைப்பின் ஊடாக முயற்சி செய்து வருகின்றது. அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட தவறுகளுக்கான பொறுப்பினை ஏற்பதற்கு நாங்கள் தயாரில்லை. எனவே கையகப்படுத்தப்பட்ட காணிகளில் பலவற்றை நாங்கள் திரும்பக் கொடுத்துள்ளோம். வடக்கிலுள்ள தமிழ் மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிழ் மக்கள் எதிர்கொண்ட உண்மை நிலைவரத்தையே சபையில் குறிப்பிட்டதாகவும், மாறாக அமைச்சர் கூறுவது போல உணர்ச்சியின் வெளிப்பாடான கருத்துக்களை ஆற்றியிருக்கவில்லை எனவும் கூறினார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்திலும் வன்முறைகள் மற்றும் சமாதானத்தை சீர்குலைக்கின்ற முயற்சிகள் வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட அனுமதிக்கப்போவதில்லை என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க இதன்போது உறுதியளித்தார். (செ-11)

## எலிக்காய்ச்சல்...

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மரணமடைந்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் பொது மக்களை அவதானமாக இருக்குமாறும் குறிப்பாக விவசாயிகளை மிகவும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் எலிக்காய்ச்சல், ஒரு பக்ரீரியா எனும் நுண்ணுயிர் வகையைச் சேர்ந்த கிருமியால் உருவாகிறது. இக் கிருமி தொற்றிய எலிகளின் சிறுநீர் ஊடாகவே அந்த பக்ரீரியா வெளிச்சூழலுக்கு வந்து சேர்கிறது. இவ்வாறு வெளியேறிய பக்ரீரியாவானது வயல்களில் காணப்படும் சிறு கிடங்குகளில் நிற்கும் நீரிலும், வயல்களில் தேங்கியுள்ள நீர்ப்பரப்புகளிலும் தங்கிவிடுகிறது.

இவ்வாறு தங்கிவிடுகின்ற பக்ரீரியா ஏற்கெனவே தோலில் இருக்கும் காயங்கள் மற்றும் வயலில் வேலைசெய்யும்போது ஏற்படக்கூடிய சிறு தோல் சிராய்ப்புக் காயங்கள், புண்கள், தோல் உராய்வுகள் என்பன வழியாக மனித உடலுக்குள் இது நுழைகிறது. வயல்களுக்கு அண்மையில் நீர்தேங்கியுள்ள குளம் குட்டைகளில் குளிக்கும்போது அந்த நீர்நிலைகளில் காணப்படும் பக்ரீரியாவானது கண்களில் உள்ள மென்சவ்வுகள் ஊடாக மனித உடலுக்குள் நுழைகிறது.

இதனால் வயல்களில் இறங்கி வேலை செய்யும் விவசாயிகளுக்கு இந்த நோய் தொற்றும் அபாயம் அதிகம் உள்ளது.

அத்தோடு வேறுதேவைகளுக்காக வயல்களில் இறங்கும் எவருக்கும் இந்த நோய் தொற்றும் அபாயம் காணப்படுகின்றது

எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகளாக, காய்ச்சல், உளைச்சல் அல்லது உடல் நோதல், தலையிடி, உடல்களைப்பு அல்லது உடல் அலுப்பு போன்ற பிரதான நோய் அறிகுறிகளுடன் கண்சிவத்தல், சத்தி (வாந்தி) கடும் மஞ்சள் நிறத்தில், சிறுநீர் வெளியேறுதல் சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளி யேறுதல், சிறுநீர் வெளியேறுவது குறைதல் ஆகிய நோய் அறிகுறிகள் இருக்கலாம். எனினும் சில நோயாளிகளுக்கு எந்த ஒரு குணம் குறியும் தென்படாதும் காணப்படலாம். எனவே உடனடியாக வைத்தியசாலையை நாடி உரிய சிகிச்சை பெறவேண்டும் என்றும் சுகாதார துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (செ-312)

## அநாதரவாக...

தனர்.

இந்நிலையில் குறித்த இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளி அராலி வீதி வை.எம்.சி வீதியில் உடலில் பல வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நிலையில் நபரொருவர் அநாதரவாக கிடந்துள்ளார். இதனை அவதானித்த சிலர் இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து இவ்வாறு அநாதரவாக கிடந்த நபரை விரைந்து வந்து மீட்ட மானிப்பாய் பொலிஸார் அவரை சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். கடுமையான வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியிருந்த நபர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பிரஸ்தாப நபர் எவ்விடத்தை சேர்ந்தவர் என்பதும் அவரது பெயர் மற்றும் எனைய தகவல்கள் என்ன என்பது தொடர்பாகவும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் குறித்த நபரை வேறெங்காவது வைத்து வெட்டிவிட்டு இப் பகுதியில் கொண்டுவந்து போட்டிருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுவதாக தெரிவித்த மானிப்பாய் பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விரிவான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளனர். (செ-4,9,30)

## அத்துமீறி தாக்குதல் மோ.சைக்கிள் சேதம்

(மானிப்பாய்)

இனந்தெரியாத நபர்கள் வீடு புகுந்து அத்துமீறி தாக்குதல் மேற்கொண்டதில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் யாழ்.மானிப்பாய் சங்கரப்பிள்ளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (செ-11)

## பிள்ளையானின் மறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண முன்னாள முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட நால்வரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியும் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிபதியுமான எம்.பி.எம்.முஹைதீன் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுளளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், கடந்த 2005ஆம் ஆண்டு, மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அன்று சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (செ)

## இரட்டைப் படுகொலை 6 நபர்களுக்கு மீளவும் மறியல்

(ஏறாவூர்)

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த அறுவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரைவிளக்க மறியலில் வைக்குமாறு, மாவட்ட பதில் நீதவான் வி.தியாகேஸ்வரன் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

மேற்படி இச்சம்பவத்தில், தாயான நூர் முஹம்மது உஸைரா (வயது 56), அவரது திருமணமாகிய மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது 32) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அறுவரும் மாவட்ட பதில் நீதிபதி வி.தியாகேஸ்வரன் முன்னிலையில், ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

கொல்லப்பட்ட பெண்ணின் கணவனுடைய சகோதரன் (வயது 24) மற்றும் 29, 23, 23, 30, 50 வயதான சந்தேகநபர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ)

# 10 கிலோ கஞ்...

மாதகல் பகுதியில் வைத்து வேறொருவருக்கு கைமாற்றப்படவுள்ளதாக இளவாலை பொலிஸாருக்கு தகவலொன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து காங்கேசன்துறைக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடைய வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்ட விஷேட பொலிஸ் குழுவானது விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக மாதகல் கடற்கரைக்கு அண்மையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்றிருந்த நபரொருவரையும் அவரது உடைமைகளையும் பொலிஸார் சோதனையிட்டிருந்தனர்.

இதன்போது குறித்த நபரிடம் இருந்து சுமார் 75இலட்ச ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் 10கிலோ கேரள கஞ்சாவினை யும் பொலிஸார் கைபற்றியிருந்தனர்.

அத்துடன் குறித்த நபரையும் கைது செய்த இளவாலை பொலிஸார் அவரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் பணம என்பவற்றையும் நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(6631)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்


af
பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & French EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF, உலகம் முழுவதும் 1000 கிளைகள். இலங்கையில் சர்வதேச பிரெஞ் Certificate ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் : யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம் : PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை ...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ...
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

ஆரம்பம் : 18.11.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம்→புகையிரதகடவை→AF (வெள்ளை மாடிக்கட்டடம்)
(சி-6421)


# மரண அறிவித்தல்



"கலைமகளின் கலைச்சிகரம்"

## தில்லை சின்னையா

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் திணைக்களம்)

அல்வாய் மனோகராவை பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட "கலைமகளின் கலைச்சிகரம்" தில்லை சின்னையா அவர்கள் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் திணைக்களம்) 14.11.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமாறன் (சுவிஸ்), திருமலர், திருமாவளவன் (சுவிஸ்), திருமகள் (ஜேர்மனி), திருவளர்ச்செல்வி (ஜேர்மனி), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கல்யாணி (சுவிஸ்), நவநீதன், சர்மிளா (சுவிஸ்), மகிழ்ரூபன் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகர் (கனடா), சிவன்ஜா ( ஆசிரியை, சென். பற்றிக்ஸ் கல்லூரி), பானுஜா (கனடா), வரதாபரன் ( I.O.M), குமாரலிங்கம் (கனடா), கவிஷனா (சுவிஸ்), பிரித்தி (சுவிஸ்), ஓவியா (ஜேர்மனி), ஆதவன் (ஜேர்மனி), ஆகாஷ் (ஜேர்மனி), திலக்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், பிரிய ஹர்சினி, சனாதனன், டினுஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல.15 நொத்தாரிஸ் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு : ம.நவநீதன் - 077 995 5860

(6623)

# சுமணரத்ன தேர...

ரத்ன தேரர், ஏறாவூர்ப்பற்று செங்கலடி - பதுளை வீதியிலுள்ள பன்குடாவெளியில் அரசமரம் உள்ள காணிக்குள் அத்துமீறி நுழைந்து விஹாரை கட்ட முனைந்ததால் நேற்று புதன்கிழமை அங்கு பதற்றமான சூழல் நிலவியது. அந்த அரச மரம் உள்ள இடத்தில் புத்தமத அடையாளங்கள் காணப்படுவதாகவும் கடந்த காலங்களில் பௌத்த வழிபாட்டுத்தலம் அங்கு இருந்ததாகவும் கூறி சர்சைக்குரிய அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தனியார் காணிக்குள் அத்துமீறி நுழைந்து அமர்ந்து கொண்டதால் இந்த பதற்ற நிலை ஏற்பட்டது.

ஸ்தலத்திற்கு அம்பாறையிலுள்ள சிங்கள மக்கள் சிலரையும் இந்த பிக்கு அழைத்து வந்திருந்தார். பதற்ற நிலைமை நிலவிய வேளையில் அங்கு கரடியனாறு பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.வியாழேந்திரன் ஸ்தலத்திற்கு விரைந்தார்.

குறித்த காணிக்குள் புத்த பிக்கு அத்துமீறி நுழையப் போகின்றார் என்று தகவல் எட்டியிருந்ததால் ஏற்கெனவே அந்தக் காணிக்குள் எவரும் உள் நுழைய முடியாதவாறு நீதிமன்ற உத்தரவைப் பொலிஸார் பெற்றிருந்தனர்.

சிறிது நேரம் நிலவிய பதற்றத்தை அடுத்து பொலிஸார் நீதிமன்ற உத்தரவை தெரியப்படுத்தியதும் சர்ச்சைக்குரிய பிக்கு தான் அழைத்து வந்த சிங்கள ஆட்களுடன் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர், அண்மையில் பிரதேச செயலர், கிராம சேவகர் உள்ளிட்ட அதிகாரிகளை கடுமையாக திட்டித்தீர்த்ததுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களையும் இனத்துவேசமாக சாடியிருந்தார்.

இதனால் சிறுபான்மையின மக்கள் பலர் கொதிப்படைந்து ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டனங்களை வெளியிட்டுவரும் நிலையில் நேற்று மீளவும் அடாவடியான ஒரு சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)


நடமாடும் மிருக வைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு: Dr.K.கிருபாகரன்

Cell : 077 973 8802
Ph : 021 224 2102
காலை 09 - 12 PM 446, நாவலர் வீதி, நல்லூர்
(6621)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6359)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
உணவே மருந்து!
SIKARAM ACADEMY, School of Hospitality
அறிமுகப்படுத்தும்


யாழ்ப்பாண பாரம்பரிய ஆரோக்கிய உணவகம்
இலைக்கஞ்சி, ஆட்டா றொட்டி, குண்டுத்தோசை
குழல் பிட்டு, கீரைப் பிட்டு, அரிசிமா இடியப்பம்
மரக்கறி, மீன், நாட்டுக்கோழி சாப்பாடு
சுறாப் பிட்டு, இறால் பிட்டு
பிட்டு / இடியப்ப கொத்து
ஆயுசு கோப்பி, பழரச பானங்கள்,
சூப் வகைகள், ஒடியல் கூழ்
பயற்றம் உருண்டை, சீனி அரியதரம்,
தட்டு வடை, முறுக்கு
யாழ் நகர எல்லைக்குள் FREE Delivery
இல.175, 1ம் குறுக்குத்தெரு
(வேம்படி பாடசாலை வீதி) யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60


# மாவீரர்களை நி...

மற்றும் பிள்ளைகள் காணப்படுகின்றனர். கணவன் வருவார் என்ற எதிர்பார்ப்புடன் மனைவிமார் குங்குமப் பொட்டுகளை அழிக்காமலும், தாலியைக் கழற்றாமலும் இருக்கின்றனர். இவர்களுக்கான பதில் எப்பொழுது கிடைக்கப்போகிறது?

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்க முடியாது என ஜனாதிபதி கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் தமிழர்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்? எவர் குற்றங்களை இழைத்தார்களோ அவர்களே விசாரணைகளை நடத்துவது எப்படி நீதியை வழங்கும்? இதனால் தான் சர்வதேச நீதிபதிகளைக் கொண்டதாக விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு அரசாங்கமும் இணங்கியிருந்தது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறித்த தீர்மானத்திலுள்ள சகலவற்றுக்கும் இணக்கம் தெரிவித்தபோதும் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

தமிழர் தாயகப் பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கும் வெற்றிச் சின்னங்கள் அவர்களுக்கு இழப்புக்களை நினைவு படுத்தும் அதேநேரம், தாம் ஆக்கிரமிக்கப்படுகிறோம் என்ற எண்ணப்பாட்டையே தோற்றுவிக்கிறது. தமிழ் மக்கள் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களை விட்டுக் கொடுத்துள்ளனர். சமாதானத்துக்காக உயிரைக் கேட்டாலும் கொடுக்கும் நிலையில் தமிழ மக்கள் இருக்கின்றனர்.

எனினும், நல்லிணக்கமும் சமாதானமும் ஏற்பட வேண்டுமாயின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். தமிழர்களின் விடுதலைப போராட்டத்தை தொடர்ந்தும் பயங்கரவாதமாக சித்திரிக்கக் கூடாது. பயங்கரவாதம் என்ற பதத்தினை அரசாங்கம் நீக்க வேண்டும்.

யுத்தத்தில் உயிரிழந்த தமது பிள்ளைகளின் படங்களை வீட்டில் வைத்து நினைவு கூர முடியாத நிலை காணப்படுகிறது. எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தினமாகும். தமிழர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்காக இதனைக் அனுஷ்டியுங்கள் பிள்ளைகளுக்காக விளக்கேற்றுங்கள்.

துயிலும் இல்லங்களில் விளக்கேற்றுங்கள் என்ற செய்தியை இந்த நாடு சொல்லுமாயின் நல்லிணக்கத்தில் பாரிய மாற்றத்தை எதிர்பார்க்க முடியும். இது முடியக்கூடிய காரியமா? என சிறிதரன் எம்.பி நாடாளுமன்றில் வைத்து கேள்வி எழுப்பியிருந்ததுடன் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (செ)

# விடுதலைப் புலி...

டன் மேலும் இருவர் முதன்முறையாக மன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் புலம்பெயர் அமைப்புக்களுடன் இணைந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீள உருவாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள் எனவும் இவர்களுக்கு பிரேசில் நாட்டில் இருந்து வாள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதை வைத்தே யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் மேல் தாக்குதல் மேற்கொண்டு வருகிறார்கள் எனவும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட 13 பேருடைய விசாரணைகளையும் மிக விரைவில் நிறைவு செய்து மன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார். (செ-9)

# தமிழ் - முஸ்லி...

காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதையடுத்து அப் பகுதியில் மீண்டும் மோதல் ஏற்படாதவாறு முழங்காவில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மோதலுக்கு காரணமான இரு குழுவினரும் அப்பகுதியில் அண்மைக்காலமாக தொடர் மோதல் சம்பவங்களில் ஈடுபட்டு வந்திருந்ததாக தெரிவிக்கப்படும் நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ- 60-312)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.